ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

தர்மம் வேதத்தாற்றான் போதிக்கப்படவேண்டியதேயன்றி பிரத்தியக்ஷத்தாலோ அனுமானத்தாலோ தெரிந்துகொள்ளக்கூடியதல்ல. அது ஸ்ருஷ்டிகாலந்தொடங்கி பிரளயபரியந்தமான மன்வந்தர யுகாதிகாலானுஸாரமாக அதிகாரிகளுக்கேற்றவாறு விதிக்கப்பட்டிருப்பதாகத்தான் பிராமாணிகர் கூறுகின்றனர். ஆகவே அவ்வப்பொழுது அவரவர்களுக்குத் தோன்றுவதெல்லாம் தர்மமாய்விடாது. தற்காலத்தில் சிலர் தமக்குத் தோன்றியதெல்லாம் தர்மமென ஸாதிக்கத்துணிந்து முன்வருகின்றனர். அநாதிகாலமாக அனுஷ்டித்துவந்த தர்மமார்க்கத்தையும், அதன் பிரமாணத்தையும் மாற்றுவதற்காக அவர் முயற்சிப்பது எதற்காகவென்று தெரியவில்லை. சில வருஷங்களாகத்தான் இந்தக் கிளர்ச்சி நம் பரதநாட்டில் கிளம்பியிருக்கிறது. அதற்குமுன்வரை தர்மத்தை விதித்துவிட்டு அதற்குப் பிந்தியகாலத்தில் அனுஷ்டிக்கவேண்டியதை விதிக்க வேதம் மறந்துவிட்டதாகப்பிரவர்த்திக்கின்றனரா? அல்லது இறந்தகாலத்திற்குப்போல் வருங்காலத்திற்குமுரியதர்மங்களை வேதம் விதித்திருந்தும் அதை மாற்றுவதற்காக முயலுகின்றனரா? வேதம் சில காலத்துக்குறிய தர்மத்தை விதித்துவிட்டு சிலகாலத்திற்குரியதை விதிக்கவில்லையென்று கற்பிப்பது உசிதமில்லை. இவ்வளவுகாலபரியந்தம்நடத்தவேண்டிய தர்மத்தைத்தெரிந்துகொண்டு விதித்த வேதம் இதற்கு மேல் நடத்தவேண்டிய தர்மத்தைத்தெரிந்துகொள்ளாமையால் விதிக்கவில்லையென்றாவது, தெரிந்திருந்தும் சக்தியில்லாமையால் விதிக்கவில்லை என்றாவது இதுவரையிருந்தவர்கள் தானாகவே தர்மத்தைக்கற்பித்துக்கொள்ளச்சக்தியற்றவர்களாயிருந்தார்களானதால் விதிக்கவேண்டியபாரம் நமக்கு வந்தது. இனிமேல் ஜனிப்பவர்கள் அந்த சக்தியுள்ளவர்களாகவிருப்பார்களானதால் அந்தபாரம் நமக்கு வேண்டாமென்று வேதம்எண்ணியதென்றாவது, சொல்லுவதும் சரியல்ல. முன்னோர்களுக்கு அத்தகைய சக்தியில்லையென்றும், தற்காலத்தியவர்கட்கு அது இருக்கிறதென்றும் தற்காலத்தியவர் ஸ்வகோஷ்டியில் முன்னோர்களைத் தூஷித்துவிட்டுத் தங்களைத் தாங்களாகவே புகழ்ந்துகொள்வது அவர் கோஷ்டிக்குத்தான் அழகாகும். எக்காலத்துக்கும் வேதத்தில் விதித்திருப்பதை நாளதுவரை அனுஷ்டித்துவிட்டு இப்பொழுது அதை மாற்றுவதற்குக் காரணத்தையும் பிரமாணத்தையும் காட்டாதவரையில் இவர் பேச்சை எவர் கேட்பார்? வேதவிருத்தமாக ஏதாவதொரு காரணத்தையும், ஏதாவதொரு பிரமாணத்தையும் காட்டுவாரானாலும் அதைத்தான் யார் கேட்பார்? இவர்கள் சொல்லுவதெல்லாம் வேதம்போல் சரியான பிரமாணமென்று ஒரு வேதமும் சொல்லவில்லை. வேதத்தையெதிர்ப்பானேயென்றால் இவர் வார்த்தையை எதற்காக எதிர்பார்க்கவேண்டுமோ தெரியவில்லை. ஆகையால் தற்காலத்திய திருத்தக்காரர் வாக்குவலையில் சிக்குண்டு சிரமப்படாமல் யாவரும் ராஜமார்க்கமான வேதத்திற்கூறிய தர்மமார்க்கத்தையாதரிப்பார்களாக. சுபம்.

பத்திராதிபர்,

ஆர்யதர்மம்.

சுக்ல-ஸ்ரீ மார்கழி-மீ ௧௨௨

தற்காலத்தியவர் கூறுவது தர்மமாகாது.

அநாதியான வேதப்பிரமாணத்திற்கு விரோதமாக, சிலர் ஏதோ சில லௌகிகப்பயன் இருப்பதுபோல் காட்டி தீண்டாமையொழிவதைப்பற்றியும், பாலிகாவிவாகத்தடை மசோதா சட்டமானபடி நிலைக்கவேண்டியதைப்பற்றியும் பெரியதோர் முயற்சி பலவிடங்களிலும் செய்வது போதாதென்று காங்கிரஸ் மஹாஸபையிலும் உருதிப்படுத்தவேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்றும் சொல்லிவருகிறார்கள். காங்கிரஸ் மஹாஸபை நம் பாரதபூமியில் வஸிக்கும் பாக்கியம்பெற்ற அனைவருக்கும் க்ஷேமத்திற்காக முன்னோர்கள் ஏற்படுத்தியதேயன்றி பார்ப்பனரல்லாத வகுப்புக்காருக்காவது பார்ப்பனரிலும் வைதிகரை விலக்கிப்பேசுபவருக்காவதுமட்டிலும் ஏற்படுத்தப்பட்டதில்லை. அதில் வைதிகர்களது நோக்கத்தை எதிர்பாராவிடில் அந்த ஸபையின் தீர்மானம் பாரத நாட்டார் யாவராலும் அங்கீகரிக்கப்படாதது பற்றி அது ஆதரிக்கத்தக்கதாகமாட்டாது. காங்கிரஸ் ஸபையார் கோரும் ஸ்வராஜ்யத்தைவிட இதாராஜாங்கமே தேவலையென்றாகும். இப்பொழுது காங்கிரஸ் கக்ஷிக்காரர் தீண்டாமை ஒழிப்பதற்கு முக்கியமானதோர் காரணம் சொல்லுகிறார்கள். அதாவது தீண்டாமையொழிக்காவிடில் நம் ஹிந்துக்களாயிருக்கும் பலர் இஸ்லாம் மதத்திலும் கிருஸ்துமதத்திலும் போய்ச்சேர்ந்துவிடுகிறார்கள். அதனால் நம் ஹிந்துக்களின் ஸங்கியை குறைந்துபோகிறதுயென்பதேயாகும். ஹிந்துக்களென்று வேறுபடுத்திப் பேசுவது மதாசாரபேதத்தாலேயன்றி வேறில்லை. மதாசாரபேதமில்லாமற்போய்விடுமானால் ஹிந்துக்களும் மஹம்மதியர்களும் கிருஸ்தவர்களும் யாவருமொரு வகுப்பாராகவே ஆய்விடுகின்றனர். அப்பொழுது ஸங்கியை குறைவதெங்கே. ஜாதிவேற்றுமையை அழிக்க முயலும் காங்கிரஸ் கக்ஷிக்காரர் எந்த ஜாதியின் மேன்

மைக்காக தீண்டாமையொழிய முயலுகிறார்களோ தெரியவில்லை. இவர்களால் முகம்மதியஜாதியையழிக்கமுடியுமா? அல்லது கிருஸ்தவர் ஜாதியைத்தான் அழிக்கமுடியுமா? ஒருக்காலும்முடியாது. அப்பொழுது அழிக்கப்படுவதாகவேண்டப்படும் ஜாதி ஹிந்துஜாதியொன்றே தவிரவேறில்லை. ஹிந்துஜாதி அழிந்துவிட்டால் ஹிந்து ஸங்கியை குறைந்துவிடுகிறதென்றதற்குப்பொருளேயில்லை ஹிந்து ஜாதியை வைத்துக்கொண்டே தீண்டாமையொழிப்பதாகக் கூறுவது பெரியவஞ்சனையாகும். அப்பொழுது ஒரு வகுப்பாரைத் தாழ்த்திவிடுவதாக ஆகாதாவென்று கேழ்க்கிறார்கள். யாரை யார் தாழ்த்துவது. யாரை யார் உயர்த்துவது. அவரவர் நிலைமையில் அவரவர் எப்பொழுதும் போலே இருந்துவருகிறார்களானால் உயர்வெங்கே? தாழ்வெங்கே? பொதுஸ்தலங்களில் அவர்களுக்குள்ள உரிமை கொடுக்கப்படவில்லையே என்று கேழ்க்கிறார்கள். பொதுஸ்தலமென்பது நாமாகக்கற்பித்துக்கொள்ளக் கூடியதல்ல. அதைப்பற்றி விசாரணைசெய்து தீர்மானம் செய்துவைத்திருக்கிறார்கள். அதை நம்பாவிடில் இவர் சொல்வது எப்படிநம்பத் தக்கதாகும். விவாஹாதி தர்மவிஷயங்களும் வியவஸ்தையில்லாமறற்போய்விட்ட பிறகு ஒரே கிருஸ்தவமயமாய் போயிருக்கும் நாட்டில் ஸ்வாராஜ்யம் கிடைத்தால் அது ஹிந்து ஸ்வாராஜ்யமல்ல. அன்னியர்கள் ஸ்வாராஜ்யம். அதற்கு இப்பொழுதுள்ள ராஜாங்கமேதேவலையென்றாகும். ஆகவே புதியபரிஷ்க்காரர் கூறுவது தர்மமாகாது. பிராசீன தர்மத்தையே யாவரும் ஆதரித்து க்ஷேமத்தையடைவார்களாக.

சுபம். பத்திராதிபர்.

அத்தியாவசியம்.

(720-வது பக்கத்தொடர்ச்சி.)

உறுதியாய் ஆங்காங்கு கண்டனக்கூட்டம் கூடி இச்சட்டம் அநீதியானது, ஆசாரவிருத்தமானது, அதிருப்தியானது என்று முறையிடவேண்டும். இதற்கு திட்டமாய் சக்தியுண்டு. நமது "ராஜப்ரதிநிதியும்" இச்சட்டம் வெகு ஜனங்களுக்கு அதிருப்தியுள்ளதாக அறியும்போது இச்சட்டத்தைப் பேதப்படுத்த தடை

யில்லாதவர் என்பது "பண்டிதநேரு"வுக்குச் சொன்ன பதிலி லிருந்து ஒருவாறு ஊஹிக்கலாம்.

நேயர்களே! இச்சட்டம் பூரணமாக மாறுவிடினும், சிறிது பாகமாவது விலக்கப்படலாம். அல்லது தென்னிந்தியாவுக்குமாத் திரமாவது விலக்கப்படலாம். இது நமது பக்திவிசுவாசத்துடன் செய்யும் முயற்சியிலடங்கி இருப்பதாக உறுதிகொள்ளுங்கள். "பில் கொண்டுவந்து நான்கு வருடகாலத்திற்கு அதிகமாகவே ஆகிறது. இது கூடாதெனச் சொல்லத்தொடங்கி ஒன்றிரண்டு வருடங்களேயாகும். சட்டம் நான்கு வருடகாலத்திற்கதிகமாக வே பற்பல வழிகளாகவேரூன்றியிருக்கிறது. நமது முயற்சிக்கு அவ்வளவு வேரூன்றிவிடவில்லை. முயற்சியின் பலத்தால் பற்பல வழிகளாகவே ஊன்றி நிற்கச் செய்யவேண்டும். நம் முயற்சிக்கு பலம் கூடாதென நினைக்கவேண்டாம்.

" प्रमादं वैमृत्युमहं ब्रवीमि "

மனிதனுக்கு சோம்பலானது மிருத்யுவாகிறது என்று மகத்வாக் யம், நமது விஷயத்தில் சத்தியத்தை வெளியிட்டு நிற்கிறது. இக் காலத்திற்குள் இவ்வளவு கெடுதலாகச்சட்டம்வருமென்று நினைக் காமல் சிறிது அஜாக்ரதையாயிருந்தது. இப்போது நம்மை வருத் தத்திற்குள்ளாக்கி விட்டது என்பது ஒவ்வொரு மதாபிமானிக ளுக்கும் நன்கு விளங்கிவிட்டது.

ஆஸ்திகமதாபிமானிகளே! தனவான்களே! இனியாவது முன்வாருங்கள். உதவிபுரியுங்கள், உன்னதியடையுங்கள். தன மின்றி ஒன்றும் நடைபெறமாட்டாது. மதவிஷயமான தினப்பதிப் புப் பத்திரிகையொன்று இத்தருணத்தில் சித்த ஔடதத்திற் கொப்பாகும்.

நாம் ஒவ்வொருவரும்பிறந்தவுடன் தரையில் படுத்தும்,பிறகு தவிழ்ந்தும், நின்றும், தவறிவிழுந்தும், நடந்தும், ஓடியும், பலம் பெற்றும், பெருங்காரியங்கள் செய்து முடித்தும் படிப்படியாய் முன்னேறி வந்திருக்கிறோம்.

இம்மாதிரி படிப்படியாய் முன்னேறிவர நம்முயற்சியே முக் கிய காரணமென்று சொல்லவேண்டியதில்லை,

ஒவ்வொருவரும் "துருவனை"ப்போல் இருக்கவேண்டும். "உபமன்னியூ" ரிஷியைப்போல் இருக்கவேண்டும். இவர்கள் தன் முயற்சியால் சிறுவயதிலேயே மஹிமை பெற்றார்கள். இவர்களின் சரித்திரத்தை பிரதிதினமும் நாம் பயின்றுவருகிறோம்.

அறிஞர்களே! திருப்தி என்பது மூன்றுவிதம். 1. உள்ளதே போதுமென்று திருப்திகொள்வது அதம திருப்தியென்றும், 2. திருப்திகொள்ளாமல் முயன்று இடையில் கிடைத்த லாபத்தால் சந்தோஷித்து நடுவில் நின்று விடுவது மத்திம திருப்தி என்றும், 3. தனது வாழ்நாள் முழுவதும் கிடைத்ததில் திருப்தி கொண்டு இன்னும் அடைவதில் முயற்சியும்செய்து உலகத்திற்கு அடையாள புருஷனாக இருப்பது உத்தம திருப்தி என்றும் பெயராம். இவ்வுத்தம திருப்திக்கு உத்ஸாகத்துடன் முன் வந்து உதவுங்கள். படித்தாய்விட்டது, செய்தி தகர்ந்துவிட்டது என்று சிறிதும் எண்ணாதீர்கள் பிரும்மனும் சிருஷ்டி செய்துகொண்டிருக்கிறான். ஸரஸ்வதீ தேவியும் பாடம் படித்துக்கொண்டிருக்கிறாள். உயிருள்ளவரை ஏதாவது செய்துகொண்டே இருப்பது பிராணிகளின் ஸ்வபாவம்.

न हि कश्चित्क्षणमपि जातु तिष्ठत्यकर्मकृत् ॥

ஒரு க்ஷணப்பொழுதாகிலும் ஏதாவது கர்மம் செய்யாதவனில்லை. அஃது சன்மார்க்கமாக இருக்கவேண்டுமென்பது சாஸ்திரங்களின் கொள்கை.

சமீபகாலம்வரை நமது, மதசாஸ்திர கிரந்தங்கள் க்ஷேத்திரங்கள், கிராமங்கள், கிரஹங்கள் இவைகளில் தானமாகநடைபெற்று வந்துகொண்டிருந்தது. இவ்வகைக்காக நவாப்புராஜன் காலத்தில் "வேதவிருத்தி" மானியம் ஏற்பட்டிருந்தது. அது இன்றும் "அத்திபூத்த்து" போல சில கிராமங்களில் நடப்பிலுமிருந்து வருகிறது. அக்காலங்களில் ஆசாரமும், தர்மமும், ஆஸ்திக்கியம் பெற்றிருந்தது.

தற்காலத்தில் நவீன வித்யாமதபோகிதர்களாய் மதக்கிரந்தங்களை மறந்து, தன்மதம் தாண்டி துற்மதங்கொண்டு, துன்பப்படும் காலம் வந்திருக்கிறது. நமது மதக்கிரந்தங்களையும், ஆசாரங்களையும் நாம் எப்பொழுது கைப்பிடிப்போமோ அப்போது

தான் மதமும், துன்பமும், விலகி சுகம் பெறுவோமென்பதில் ஐப மில்லை. துராசாரத்தின் தோஷம், சதாசாரவிருத்தியாலும், துஷ்டர்களின் குணம், சிஷ்டர்களின் குணத்தாலும், நாஸ்திக்கியம் ஆஸ்திக்கியத்தாலும், வெளிவரவேண்டும். ஆகையால் காலோசிதத்தை அறிந்து தாமதமின்றி முயற்சியைச் செய்யுங்கள். தினசரிப் பத்திரிகையைத் தீவிரமாய் வெளியிடுங்கள். தர்மாத்மா தயை புரிவாராக.

சாரதாபில்லின் சந்தேக நிவிருத்தி.

மகான்களே !

தற்காலம் சாரதாபில் வந்த காரணமாக ஆஸ்திகர்கள் "கப்பல்கொடிமர காக்கை"போல வழியின்றி தவித்து நிற்கிறார்கள். இக்காலத்தில் சிலசாஸ்திரரஹஸ்யங்களை அறிந்துகொள்ள வேண்டியது அத்தியாவசியமானதுபற்றி எழுதுகிறோம்.

1. பிராம்மணனுக்கு ஸ்வதர்மம் அத்தியாவசியமா ?
2. ராஜாக்ஞையை தப்பி நடப்பது தர்மமா ?
3. ஆபத்தில் அதர்மம் விகிதமா ?
4. ஆபத்தில் அதர்மத்திற்கு பிராயச்சித்தம் ஆவசியமா ?

இக்கேள்விகளுக்கு சாஸ்திரம் என்ன வழிசொல்லுகிறது என்று தெரிந்துகொண்டால், வழியின்றி தவிக்கும் ஆஸ்திகர்களுக்கு மனச் சாந்தி உண்டாகுமென்பது நிச்சயம்.

ब्राह्मणस्य हि देहोऽयं क्षुद्रभोगाय नेष्यते ।
इह क्लेशाय महते प्रेत्यानन्तसुखाय च ॥

பிராமணனுடைய சரீரம் இங்கு அற்பவிஷயபோகத்திற்காக ஏற்பட்டதல்ல. இங்கு பெரியகஷ்டத்தையனுபவித்தாலும், பின்னீடு பேரின்பம் பெறுவதற்குள்ள சாதனங்களைத் தேடவே உபயோகமானது; ஆனால் பேரின்பம்பெற மார்க்கம் யாதெனில்,

स्वस्वजातेर्हि यत्कर्म कथितं तेन वर्तयेत् ।
अन्यथा वर्तमानो हि सद्यः पतति जातितः ॥

தன் தன் ஜாதிக்கு எவ்விதம் கர்மா ஏற்பட்டிருக்கிறதோ அவ் விதமே நடக்கவேண்டும். மாறினால் கண்டிப்பாய் ஜாதியை இழந் தவனாவான் என்றார். ஜாதியை இழந்தால் என்ன ? என்றால்,

उत्सन्नकुलधर्माणां मनुष्याणां जनार्दन ।
नरके नियतं वासो भवतीत्यनुशुश्रुम ॥

ஸ்வதர்மத்தை இழந்த ஜனங்கள் எப்பொழுதும் நரகத்திலேயே வஸிக்கிறார்களென்று கீதாசாஸ்திரத்தில் சொல்லியிருப்பதால் பக வதாக்ஞைபின்படி மீளாநரகம் வந்து சேருகிறது. இது மிக கஷ்டமேயாம். இக்கஷ்டம் விலக வழியாதெனில்

श्रेयान्स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।
स्वधर्मे निधनंश्रेयः परधर्मो भयावहः ॥

நன்கனுஷ்டிக்கப்பட்ட பிறருடைய தர்மத்தைக் காட்டிலும் குண மில்லாததும் நன்கு அனுஷ்டிக்கப்படாததுமான தன் தர்மம் மேலானது. தன் தர்மத்திலேயே மரணம் நல்லதாம். பரதர்மம் ஆபத்தை விளைவிப்பதாம்.

श्रेयान्स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।
स्वभावनियतं कर्मकुर्वन्नाप्नोति किल्बिषम् ॥ (मनुः)

தனக்குறிய கர்மம் நலமில்லாததாயினும் நன்றாய் அனுஷ்டித்த பிறரது கர்மத்தினும் மிக நல்லது. ஸ்வபாவத்தால் அமைந்த தைச் செய்பவன் பாபத்தை அடையமாட்டான்.

स्वेस्वेकर्मण्यभिरतः संसिद्धिं लभते नरः ॥

தன் தன் கர்மத்தில் ஆசையுள்ளவன் சித்தி பெறுகிறான். இவ் வழியின்றி கடைத்தேற வேறு மார்க்கம் இல்லையோவென்றால்,

नान्योविमुक्तये पन्थाः मुक्त्वाश्रमविधिं स्वकं ।
तस्मात्कर्माणि कुर्वीत तुष्टये परमेष्ठिनः ॥

தன் தனது ஆச்ரமத்தின் விதி எதுவோ அதைவிட்டுக் கடைத் தேற ஜீவனுக்கு வேறு மார்க்கமில்லை. ஸ்வதர்ம ஸத்கர்மங்களை ஈசுவர திருப்திக்காகச் செய்து ஜீவனைக்கடைத்தேறச் செய்ய வேண்டும். இவ்வாறு சாஸ்திரம் சாஸனம் செய்திருப்பதால் இதைத் தப்பி நடந்தவன் தன் நிலைத்தப்பினவனாகிறான். நிலை

தப்பினவன் ஆபத்தில் எளிதில் சிக்கிக்கொள்வான். தாமரைக்கு ஜலமும் சூரியனும் தாய், தந்தையுமாவார்கள். அத்தாமரை தன் நிலைத் தப்பி வேறுபட்டு போனால் தாயாகிய ஜலமே அதை அழுகச்செய்யும். கரையிலெடுத்துப்போட்டால் தந்தையாகிய சூரியன் காயவைத்து கொல்வான். நிலை தப்பினதால் தந்தை தாயே சத்துருவாக வருவதுபோல, ஸ்வதர்மம் இழந்தவனை அத்தர்மமே கெடுத்துவிடும் என்பது திண்ணம்.

பூர்வத்தில் " ராகு " என்றவன் அசுர பந்தியை விட்டு, நியமம் தப்பி தேவபந்தியில் வந்து அமிருதம் புஜிக்க எண்ணினான். பகவான் இதை அறிந்து சிரச்சேதம் செய்து அவனை சிக்ஷித்தார் என்று பாரதம் கூறுகிறது.

இவ்வாபத்திற்கு தன் நியமம் தவறி நடந்ததே காரணம். தவறி நடந்தவனை இங்கு யார் கண்டு சிக்ஷிக்கப்போகிறாரென்றால்

गुरुरात्मवतां शास्ता राजा शास्तादुरात्मनाम् ।
इह प्रच्छन्नपापानां शास्ता वैवस्वतो यमः ॥

ஆத்ம ஞானத்தை விரும்பும் உத்தமனுக்கு நேரிடும் தோஷங்களை நீக்க ஞானோபதேசம் செய்யும் குரு தண்டனாதிகாரியென்றும், திருடன் முதலிய துஷ்டர்களுக்கு அரசன் தண்டனாதிகாரியென்றும், இவ்வுலகில் மறைவாகச்செய்த பாபத்திற்கு "யமன்" தண்டனாதிகாரி என்றும், சாஸ்திரம் சொல்லுகிறது. மறைவாக பாபம் செய்தவன் திருடனாவான். அப்போது ராஜதண்டனையும், யமதண்டனையும் நிச்சயம். ஸ்வதர்மம் விடக்கூடியதல்ல இதனால் "ஸ்வதர்மம்" அத்யாவசியம் என்பது விளங்கிற்று.

2. ராஜாக்ஞையைத் தப்பி நடப்பது தர்ம்மமா ? என்ற இரண்டாவது கேள்விக்கு ஸமாதானம் யாதெனில்,

" नाविष्णुःपृथिवीपतिः " என்றப் பிரமாணப்படி மஹாவிஷ்ணுவின் அம்சமின்றி பூபதியாகமாட்டான். இவ்வுலகில் பூபதியின் ஆக்ஞையானது மஹாவிஷ்ணுவின் ஆக்ஞைக்கு துல்லியமாம். பூபதியானவன் ஏதாவது சட்டம் இயற்றவேண்டி வருங்காலத்தில் வித்யா, சக்தி, சாமர்த்திய குணம் நிறைந்த மஹாஜனங்களுடனும், மந்திரிச்ரேஷ்டர்களுடனும், நன்கு ஆலோசித்து சாதக பாதகங்களை அறிந்து இது ராஜ்யக்ஷேமத்திற்கும் பிரஜைகளுக்

கும் அத்யாவசியமென்று வரும்போது ஜன ஸம்மதத்தை பூர்ண மாகப் பெற்ற பிறகு அதைச்சட்டமாக்குவது முற்கால வழக்கம். ' नहिसर्वस्सर्वजानाति 'என்றபடி எல்லாமறிந்தவன் ஒருவனுமில்லை. 64-கலைகளும் அறிந்தவர்கள் அகப்படுவது துர்லபமானது பற்றி ஒன்றிரண்டுகலைகளை அறிந்த மகாஜனஸமிதி ஒன்று கூட்டி வைத்தால் அதில் பல வித்வான்களும் சேருங்கால் 64-கலைகளும் அச்சபையில் விளங்கக்கூடுமென்று எண்ணி அச்சபையின் வாயிலாக நியாய, அநியாயங்களை தெரிந்துகொண்டு ஜனசம்மதத்துடன் சட்டம் நியமிப்பது நீதி மன்னனின் முக்கிய காரியமாம். இவ் வழக்கம் இன்று நேற்ற வந்ததல்ல. தசரதசக்கிரவர்த்தி காலத்திலேயே நடப்பிலிருந்து வருகிறது. ஸ்ரீ ராமனுக்கு முடிசூட்ட கருதின தசரதன் வசிஷ்டாதிகளான பிராமணசிரேஷ்டர்களையும், மந்திரிகளையும் பழக்கவழக்கத்தை அறிந்த ராஜ்ய ஜனங்களையும் கொண்ட ஓர் சபையைக்கூட்டி அச்சபையின் கண் தன் உத்தேசத்தைத் தெரிவித்து இக்கார்யம் சர்வஜன சம்மதமாகில் நான் செய்ய நினைக்கிறேன்என்றுஜனசம்மதத்தை வேண்டினனென்று இராமாயணம் நம்மைஉபதேசிக்கிறது. ஜனசம்மதத்துடன்செய்த காரியத்திற்கு ஆக்ஷேபம் வருவது வழக்கமில்லை. அதனால் ஆட்சேபம் வரும் காரியங்கள் சர்வஜன சம்மதம் பெற்றதாக ஆகமாட்டாது என்பது வாதமற்ற விஷயம். ஜனசம்மதத்துடன் ஆக்ஷேபமின்றி நிறைவேற்றப்பட்ட பூபதியின் சட்டத்திற்கும், மஹாவிஷ்ணுவின் ஆக்ஞைக்கும் யாதொரு வித்தியாசமில்லை. ஆதலால் இம்மாதிரி மஹிமை வாய்ந்த ராஜாக்ஞையை மீறி நடப்பது பாபமேயாகும்.

நமக்குத் தற்காலம் வந்துகூடியிருக்கும் விவாஹபில் (Marriage Bill) சட்டம் பூபதியின் சட்டமேயாம். இருந்தாலும் இச்சட்டம் அத்தியாவசியமெனக் கொண்டு வந்ததும் ஆதரித்ததும் ஆக்ஞை செய்யமன்றுடியதும் அதற்கு அனுகூலமாக ஓட்டு கையொப்பமிட்டதும், நமது வேதசாஸ்திர மதவிஷயததில் சிற்றறிவுள்ள பிரதிநிதிகளேயாம். சட்டமாக்க சாதகமாய் ஓட்டு கிடைத்த ஓர் நியாயத்தை அவலம்பித்து ராஜாங்கத்தாரும் இச்சட்டம் இயற்றினர்களேயன்றி வேறில்லை. இவ்விஷயத்தில் ராஜாங்கத்தைக் குறை கூறுவதில் நியாயமில்லை. இதையே முஸ்லீம்சகோதரர்களுக்குராஜப்ரதிநிதிகூறியிருப்பதிலிருந்து அறிகிறோம். "குலத்

ழைக்கெடுப்பது கோடரிக்காம்பு" என்றுவிருக்ஷங்கள்வருந்துவது வழக்கம். விருக்ஷத்தை வெட்டிமுறிக்க அதன் காம்பே கோடரிக்கையாக உதவுகிறதுபோல சனாதன ஹிந்து தர்மவிருக்ஷத்தை வெட்டி முறிக்க தர்மவிருக்ஷத்தின் குலத்திலுதித்த சாரமற்ற சிறு கம்புக்கொப்பான ஹிந்து என்ற நாம மாத்திரம் வஹித்தவர்களே ஒட்டுக்கொடுத்து உதவினார்கள். "தன்வினை தன்னையே சுற்றிற்று" இவர்களை ஜனப்ரதிநிதிஸ்தானத்திற்கு யோக்யதா பத்திரம் (Certificate) கொடுத்து அனுப்பினதே ஜூபத்தாச்சுதென்று அறியாதார் யாருமில்லை. இவர்களின் சாதகமான ஒட்டைக் காரணமாக வைத்து மற்றொன்றையும் கவனிக்காமல் சட்டமாக்கின ராஜாக்ஞையைத்தப்பிநடப்பது தர்ம்மசாஸ்திரவிரோதமில்லையென்றறியவேண்டும். முன்னதாக இவ்விஷயத்தில் தர்ம்மசாஸ்திர பரிசீலனை திருப்தியாக நடக்கவில்லை. மேலும் மதவிஷயத்தில் இஷ்டப்படி செய்துகொள்ள தார்மிகர்கள் இவர்களை பிரதிநிதியாக்கி அனுப்பவில்லையென்று பிரத்தியேகம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். "ஓர் விரலைப்போட இடங்கொடுத்தது தலைப்போடும்படி ஆச்சுது.

"விவாஹம் என்பது ராஜ்ஜிய தந்திரம்போல் உள்ளதல்ல' பிரத்தியேக 'வேதசாஸ்திர" நியமத்தை அனுசரித்த ஓர் திவ்ய ஸம்ஸ்காரமாம். இக்கால மனிதபுத்திக்கு விளங்கும்படி வேதாகமங்களை ஸ்மிருதியாக இயற்றின ரிஷிகள் பலர். ஸ்மிருதிகளும் அவ்விதமே. ஹிந்து தேசமும் தேசாசாரமும் பற்பல விதத்தில் விளங்கி நிற்கிறது. ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு ஸ்மிருதி ஆசாரமாகக்கொண்டாடப்பட்டுவருகிறது. அத்தேசத்திற்குமவை நியாயமே. இவ்விதம் சாஸ்திர ஆசாரானுஷ்டானங்கள் ஹிந்து தேசத்தில் வெவ்வேறாக இருக்கும்போது, சர்வதேசத்திற்கும் ஒரே விதமான சட்டம் பொருந்தக் கூடியதல்ல. இவ்விஷயத்தில் ஜனபிரதிநிதிகளே குற்றக்காரர்களாக இருப்பதால் ராஜாக்ஞைப்படி ஏற்பட்ட சட்டமென்று இதை ஒப்புக்கொண்டாலும், சாஸ்திர மரியாதை சிறிதும் சோரதபடி கேவலம் மிருக சுகத்தைநம்பி நடப்பவர்களின் நயவஞ்சக மோசத்தால் வந்திருக்கும் இச்சட்டத்தை மீறி நடப்பது தர்ம்ம விருத்தமல்ல, சகலத்திற்கும் சாஸ்திரமே பிரமாணம். இச்சட்டத்தில் அஃதில்லாததால் தர்ம்ம நியாயப்படி ஆதரிக்கத் தக்கதல்ல என்பது சித்தம்.

3. "ஆபத்தில் அதர்மம் விஹிதமா" என்றதைச் சற்று ஆராய்வோம். அதர்மம் என்பதற்கு தப்பி நடத்தல் (பாபம் செய்தல்) என்று பொருள்கொள்ளவேண்டும். பாபம் பலவழிகளாக வந்துகூடுவதுண்டு. இதன் ரகசியத்தை 'பார்வதிதேவிக்கு' பரமசிவன் உபதேசிக்கிறார்.

"ஹே பார்வதீ"! ஹிம்சை செய்வது பாபமாகும். ஆனால் இதால் சிலதுகள் பாபமாகா; அவைகளை முறையே கேள்.

ஒருவன் தெய்வதிருப்திக்காக தீபம் வைக்கிறான். அதில் அனேகம் விட்டில்கள் விழுந்து சாவதுண்டு. ஆனால் விளக்கு வைத்தவனுக்கு இப்பாபம் வருவதில்லை. சர்வரூபியான ஈசன் இப்பாபத்தை விலக்குகிறார்.

பூமியை உழுது பயிர்விருத்திசெய்யக்கருதினவன் உழுங்காலத்தில்எவ்வளவோ ஜீவகோடிகள் மடியக்கூடும். பிராணிகளின் ஜீவனத்திற்குள்ள ஆகாரவஸ்துவை விருத்திசெய்யக்கருதி உழுவதால் இப்பாபமும் அவனைச்சாருவதில்லை.

வேதவிதிப்படி வேள்விசெய்யும்போது பசுவின் வபையை எடுத்து ஈச்வரார்ப்பணம் செய்கிறான். இதனால் உண்டாகும் பாபத்தை மந்திரதேவதை ஏற்றுக்கொள்வதால் பாபம் இவனைத் தொடுவதில்லை.

மகாயுத்தகாலத்தில் அநேகம் வீரர்களைக்கொன்று ஜயம் பெற்றாலும், அல்லது மடிந்தாலும் வீரஸ்வர்க்கம் கிடைக்கும். இப்பாபத்தை இலக்ஷ்மி ஏற்றுக்கொள்ளுவதால் யுத்தவீரனுக்கு வீரஸ்வர்க்கம் விகிதமாச்சுது.

உலகநன்மைக்காகக் காட்டில் கடினதவம் புரியும் தவசிகளுக்கு விரோதம் செய்யக்கூடியதும் பயிர் முதலியதுகளை அழிக்கக்கூடியதுமாகிய துஷ்டமிருகங்களை வேட்டையாடிக்கொன்று சாதுரக்ஷணம் செய்வது ராஜநீதியானதால் அவனுக்கு இதில் பாபமில்லை.

சதாசாரத்தைக் கெடுக்கும் துராசார புருஷர்களைக்கொல்வதால் பாபமில்லை. இதையே வாலிவதத்தில் ஸ்ரீராமன் வெளியிட்டிருக்கிறார்.

வேனன்என்ற துஷ்டராஜனையும்,ரிஷிகள் சபித்துக்கொன்று லோகக்ஷேமத்தைச் செய்து வைத்தார்கள். இதனால் பாபம்

என்பது மனமறிந்து செய்யும் ஓர் துஷ்கிருத்தியமென்று சொல்ல வேண்டும்.

நமது செய்கை யாவற்றிற்கும் மனமே காரணம். ஆனால் நாம் எந்த நோக்கத்தைக்கொண்டு, காரியத்தைச் செய்கிறோமோ அந்த நோக்கத்தின்படி பலன் உண்டாகுமேயல்லாது செய்கையின்படிக்கல்ல.

உதாரணம்:— ஒருவன் காட்டில் மறைந்து மற்றொருவனைக் கொல்ல முயல்கிறான். அதையறிந்தவன் ஓடி ஓர் குகைக்குள் ஒளிந்தான். அக்குகையில் அவனுக்கு நிரம்ப பொன் கிடைத்தது. ஆனால் பொன் கிடைப்பதற்கு கொல்ல முயன்றவனே காரணமாம். இதால் கொல்லநினைத்தவனுக்கு பாபத்திற்கு தண்டனைமாத்திரம் கிடைக்குமேயல்லாது,மற்றவன் செல்வந்தனானதற்கு காரணமாயிருந்த நற்பயன் சிறிதுமில்லை. ஏனெனில் அவன் மனம் கொலைசெய்வதையே நோக்கமாகக்கொண்டிருந்ததேயாம். அதனால் மனதையே பாபவிஷயத்தில் கவனிக்கத்தக்கது. நிற்க, ஒருவனை புலியொன்று பிடித்துக்கொண்டது அதைக்கண்ட மற்றொருவன்,அவனை விடுவிக்கக்கருதி புலியைச்சுட எத்தனித்தான். புலியோ மனிதனைக்கட்டி சேர்ந்திருந்தது, அவனை விடுவிக்கக் கருதி சுட்டபோது, மனிதனின் மேலில்பட்டு இறந்தான். இதில் பாபபலன் சுட்டவனுக்கில்லை. ஏன்? அவனை ரக்ஷிக்கவேண்டும் என்று மனநோக்கம் கொண்டிருந்ததேயாம்.

வைத்தியனொருவன் ஓர் ரோகியை ரக்ஷிக்கக்கருதிஆப்ரேஷன் செய்து பாடுபடுகிறான். ஒருவேளை ரோகி வினையின்பயனால் தவறிவிட்டால் வைத்தியனை பாபம்சாரமாட்டாது. ஏன்? அவன் ரோகி சுகம்பெறவேணுமென்று மனநோக்கம் வைத்திருந்ததேயாம்.

ஒருவன் பிரும்மஹத்தி செய்யத் தயாராக இருந்தான். ஆனால் உத்தேசித்த வேலையைச் செய்துமுடிக்கத்தக்க சமயம் வாய்க்காமல் எதிர்பார்த்திருந்தான். இதையறிந்த மற்றொருவன் அவனைக்கொல்ல நான் சொல்லும் வழியாகச் சென்றால் மிக்க எளிதில் கொன்றுவிடலாம் என்று வழியைக் காட்டிக்கொடுத்தான்; அதன்படியே அவனும் தனது உத்தேசத்தைச் செய்து முடித்தான். இவ்விதம் செய்தவனுக்குள்ள பாபத்தைவிட அதற்கு வழியைத்தூக்கொடுத்து தக்க உபகாரம் புரிந்துவதத்தை நடத்தி

முடிக்கச் செய்தவனுக்கே அதிகபாபமாம். ஏனெனில் இவன் கெட்டவன் உத்தேசித்திருக்கும் காரியமும் கெட்டதென அறிந்திருந்தும்பாபம் செய்ய உதவிபுரிந்ததால் மனமறிந்துசெய்ததாம். மனமறிந்து செய்வது பாபமென இதனால் வெளியாகிவிட்டது.

"சாரதாபில்" சட்டத்தை ஏற்றுக்கொள்ளாமலிருப்பது பாபமாகமாட்டாது. தர்மாஹிதமான ஜயில்வாசமும் சிறந்ததெனஅறிந்துகொள்வோமாக. இதனால் ஆபத்தால் அதர்மம் விகிதமாகுமெனக் கொள்ளவேணும். இவ்விஷயத்தில் பல சரித்திரங்களும் நம்மை உபதேசித்துவருகிறது.

'தேவகி,வசுதேவர்கள்' குற்றமில்லாமலே ஜயில் வாசம்செய்தார்கள். "கிருஷ்ணபகவானின்" ஜனனம் காராக்கிரகத்திலென்று அறியாதார் யாருமிருக்கமாட்டார்கள்.

பாண்டவர்களும் தர்மரக்ஷணத்திற்காக ஜயில்வாசத்திற்கொப்பான அக்ஞயானவனவாசம் செய்துவந்தார்கள்.

ஆபத்தில் சீதை அசோகவனத்தில் தாமசித்ததும் இதற்கு ஒப்பாகக்கருதலாம்.

ஆபத்தில் "நாரதமுனிவரும்" பௌத்தமதத்தை லோக ரக்ஷணார்த்தமாக ஆசரித்திருக்கிறார்.

ஆபத்தில் தர்மநிமித்தமாக "ஹரிச்சந்திரனும்" கேவலமான சுடலையைக் காத்தான்.

ஆபத்தால் விசுவாமித்திரரும் ஜீவரக்ஷணார்த்தமாக புலையன் வீட்டில் "சுவானமாமிசம்" புசித்திருக்கிறார்.

முன்னொருகால் "சாமவேதபாரங்கத" ரொருவர், யானைப்பாகர்கள் வசிக்கும் ஓர் தேசத்தில் வசித்துவரவே அதிவிருஷ்டியின் காரணமாக பஞ்சம் வந்துசேர ஆகாரத்திற்கு வழியின்றி யானைப்பாகர்களின் எஜமானனிடம் பசிக்கு ஏதாவது ஆகாரம் கொடுவென்று கேட்டார். அதற்கவன் நான் சாப்பிட்ட மீதிசில பயறுகளிருக்கிறது. அதை வேணுமானால் தருகிறேன் என்றான். அதற்கவர் இசைந்துப் பயறைப் புசித்தார். அப்போது யானைப்பாகன் மீதியான ஜலமிருக்கிறது சாப்பிடுங்கள் எனவே, அது நீ சாப்பிட்டமீதியானபடியால் சாப்பிடக் கூடாதென மறுத்தார். அப்படியானால் பயறு நான் புஜித்த மீதியல்லவோ என்றான். அதற்கு அவர் ஆபத்காலத்தில் பிராண ரக்ஷணத்திற்காக சிறிது பாபம் செய்வது குற்றமாகாது.

மனிதஜன்மம் மிக அறிது. அதிலும் புருஷனுகப் பிறப்பது அறிது. அதிலும் தவப்பயிற்சி முதலிய சதாசாரமுள்ளவன் அறிதிலும் அறிதானவன். சதாசாரமே மோக்ஷமார்க்கம். அதற்குச் சரீரம் முக்கியம். நான் இப்போது அப்பயறுகளை உண்ணுவிடில் மோட்ச சாதனமாகிய சரீரம் நசித்துவிடும். ஜலம் அருந்தாமல்போனுல் நசிக்கமாட்டாதென நம்பிக்கையிருக்கிறது. ஆகையால் ஜீவாட்சணத்திற்காக பயறு சாப்பிட்டது ஆபத்தர்மமாகும். இதனுல் கெடுதலில்லை என்று நமது உபநிஷத்து, பாரதம், பாகவதம், ராமாயணம் முதலிய சாஸ்திரங்கள் உபதேசித்து வருவதாலேயிருந்து ஆபத்தர்மத்தை அறிந்து செய்வது உசிதமேயாம்.

இனி ஆபத்துக் காலத்தில் செய்த அதர்மத்திற்கு பிராயச்சித்தம் ஆவசியமா என விசாரிக்குமளவில் அதர்மம் என்பது என்றும் அதர்மம்தான். ஆபத்காலத்தில் அதர்மத்திற்கு ஸ்வயமாக ஏற்பட்டிருக்கும் பலம் கிடையாது.

ரோகநிவர்த்திக்காக மத்யம் முதலிய நிகிருஷ்டவஸ்துக்கள் உபயோகிக்க வைத்தியசாஸ்திரம் கூறுகிறது ரோகநிவர்த்தி ஏற்பட்டபிறகு அபக்ஷியபக்ஷணுதிகளுக்காக சிறிது பிராயச்சித்தம் செய்வதும் விஹிதமாம். மேற்சொன்ன மகான்கள் ஆபத்காலத்தில் உபயோகித்த அதர்மத்திற்கு தவம், ஸ்நானம், தெய்வதரிசனம், தீர்த்தயாத்திரை முதலிய நற்செய்கைகளைச் செய்ய விதித்திருக்கிறுர்கள்.

காராக்கிரஹவாசபிராயச்சித்தவிதிப்படி உக்கிரமாகச் செய்ய வேண்டியது ஆவசியமில்லை. ஆனுல் சாமான்னியமாக ஸ்நான, தரிசனுதிகளால் விலக்கிக்கொள்ளலாமென்று பல காரணங்களால் ஊகித்தறியலாம்.

உதாஹரணம்:— 17-வது நாள் பாரதயுத்தத்தில் கர்ணனை அர்ஜுனன் கொன்றுவிடுவானென்று எதிர்பார்த்திருந்த "தர்மபுத்திரரின்" முன்னிலையில் அர்ஜுனன் வரவே அவனைக்கண்டு அவனையும் அவனது காண்டிபதனுசையும் இழிந்துபேசினுர். அவனுக்குக் கோபம் பிறந்தது. தர்மபுத்திரனை வெட்ட கத்தியைக் கையிலெடுத்தான். அச்சமயம் கிருஷ்ணபகவான் 'ஹெ அர்ச்சுன!' உன் தனுசை இழிந்துபேசினவனைக் கொல்வதாக சபதம் செய்திருப்பது உண்மை. அதன்படி தர்மனைக் கொன்றுல் தமயனைக் கொன்ற தோஷம் வருவது நிச்சயம். இதில் சபதம்செய்ததை

விட்டுவிடுவதா — தமயனைக்கொல்வதா என்று சற்றுலோசித்து உசிதத்தைச்செய் என்றார். அப்போது அர்ஜுனன் ஒன்றும் தோன்றமல் தர்மசங்கடத்திற்குள் மூழ்கிநிற்கவே இவ்விரண்டிற்கும் தோஷம் வாரதபடி பகவான் ஓர் தத்துவம் உபதேசித்தார். உன் சம்மதப்படி தமயனைக் கொல்லவேண்டியது நியமமானதால் பெரியோர்கள் செய்த குற்றத்தைச் சிறியோர் சிக்ஷிக்கும்படி வருங்காலத்தில் பெரியோர்களை ஏகவசனமாக நிந்தித்துப் பேசுவது வதம்செய்ததற்கு துல்யமாம். ஆதலால் தர்மனை ஏகவசனமாக நிந்தித்துப் பேசிவிடு. அப்போது உன் சபதமும் நிறைவேறும். தமயனுக்கும் க்ஷேமம், தர்மசங்கடமும் விலகும் என்று உபதேசித்தார். அவ்விதமே அர்ஜுனனும் இழிவாகப்பேசி சபதம் நிறேவேற்றி பிறகு பச்சாத்தாபப்பட்டு அதை நீக்கிக்கொண்டானென்று பாரதம் கூறுகிறது.

ஸ்ரீராமனுக்கு லக்ஷ்மணனைக் கொல்லும்படியான ஓர் காலம் கடைசியில் நேர்ந்தது. அப்போது கொல்ல மனமில்லாதவனுகவிருக்கவே இதையறிந்த தர்மாரஜன் நேத்திரத்தில் படாமல் தேசத்தைவிட்டோடுவது வதைக்கு துல்யம். அதைச் செய்யும் என்று சொல்ல, அவ்விதமே லெக்ஷ்மணனை விட்டுப் பிரிந்தான் என்று உத்தாராமாயணம் உறுதிசெய்கிறது. இம்மாதிரியான சரித்திரங்களால் நாம் அறிந்துகொள்ளவேண்டியதென்னவெனில் தர்மசங்கடமாகப் பிராயச்சித்தம் அநுஷ்டிக்கநேர்ந்தால் இம்மாதிரி லேசானமார்க்கமாக பிராயச்சித்தம் தேடிக்கொள்ளலாம் என்பதேயாம்.

ஆஸ்திகர்களே! பாபத்திற்குப்பிராயச்சித்தம் அத்யாவசியம்.

पश्चात्तापोहि सर्वेषामघानां निष्कृतिः परा ।
तेनैव कुरुते सद्यः प्रायश्चित्तं सुधीर्नरः ॥

ஸகல பாபங்களுக்கும் பச்சாத்தாபமே பரிகாரமாகும்.

ஆகையால் பச்சாத்தாபத்துடன் வித்வானுபுள்ளவன் தாமதமின்றி, பிராயச்சித்தம் செய்துகொள்கிறன் என்று உபதேசித்திருப்பதால் "பில்" (Bill) விஷயமாக காராக்கிருக வாசத்திற்கு பச்சாத்தாபமே போதுமான பரிகாரமாகலாம். தன் சரீரசுத்திக்காகவும், ஈசுவரதிருப்திக்காகவும் பிராயச்சித்தம் ஆவசியமென்றே கருதவேண்டும்.

K. S. சங்கரராமசாஸ்திரி,

பாரிதோஷிகமஹாஸபை. சிதம்பரம்.

சிதம்பரம் ரா. ம. சு. வித்யாசாலையில் மார்கழி-மீ 3உ (17—12—29) வார்ஷீகபரீக்ஷையில் யஜுர்வேதம், ஸாமவேதம், ஸாஹித்யம், வியாகரணம் இதுகளில் தேரிய மாணுக்கர்களுக்கு பாரிதோஷிகம் கொடுக்க மாலை 5-மணிக்கு ஓர் மஹாஸபை கூடிற்று. ஷை ஸபைக்கு சிதம்பரம் பிரின்ஸ்பல்—முனிஸீப் மகா-ா-ஸ்ரீ G. S. வெங்கட்டராமய்யர் அவர்கள் அக்கிராஸனம் வகித்தார்கள். ஷை ஸபைக்கு ஸ்ரீமந் நடராஜமூர்த்தியின் தெரிசனத்திற்காக வந்திருந்த பல பண்டிதர்களும் ஷை வித்யாசாலை தர்மகர்த்தாக்களும் வந்திருந்தார்கள். பிறகு ஷை வித்யாசாலையின் பிரதமோபாத்தியாயரான M. N. ராகவசாஸ்திரிகளவர்கள் அக்கிராஸனரை வரவேற்றல் செய்தார்கள். பிறகு மங்களாசரணம் வேதரூபமாகவும் சுலோகரூபமாகவும் நடைபெற்றது. பிறகு ஷை சாஸ்திரிகள் ஷை வித்யாசாலையின் ரிபோர்ட்டைப் படித்தார்கள். பிறகு அக்கிராசனரின் முகவுரை நடந்தது. பிறகு ஷைவித்யாசாலையின் மாணுக்கர்களான புடார்ஜுனன், வாஞ்சிநாதன் என்று பெயருடையவர்களால் சம்ஸ்கிருதபாஷா விஷயமாய் சம்பாஷணை செய்யப்பட்டது. P. S. கிருஷ்ணமூர்த்தி என்று பெயருடைய மற்றொரு வித்யார்த்தியால் சம்ஸ்கிருத பாஷையில் உபன்யாசம் செய்யப்பட்டது பிறகு ஷை வித்யாசாலையில் படித்தவர்களாயும் மே. சே. வித்யாசாலை பிரதான அத்யயனர்களாயுமிருக்கிற ப்ரம்மஸ்ரீ பரமேச்வரசாஸ்திரிகள், அண்ணுமலை யூனிவர்ஸிடி பண்டிதர் நரஸிம்மசாஸ்திரிகள் முதலானவர்கள் உபன்யாஸம் செய்தார்கள். பிறகு வித்யார்த்திகளுக்கும் பரிசு அளிக்கப்பட்டது. பிறகு அக்கிராசனரான முனிஸீப் G.S. வெங்கட்டராமய்யர் அவர்களால் நல்நடத்தை ஸதாசாரம் வேதசாஸ்திராபிவிருத்தி இதுவிஷயமாய் ஒருமணிநேரம் உபன்யாசம் செய்யப்பட்டு தாம்பூலவழங்கலுடன் ஸபை கலைந்தது.

இப்படிக்கு,
A. வெங்கடராமன்,
சாஸ்திரவித்தியார்த்தி.

ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

பரஸ்பரம் ஒற்றுமைப்பட்ட அபிப்பிராயமுள்ளவர்கள் பலவகைப் பட்டவர்களாயினும் ஒரு காரியத்தை ஸாதிக்கச் சேர்ந்து முயற்சிப்பார் களானால் அதை ஸாதித்துவிடலாம். அபிப்பிராயம் ஒற்றுமைப்படாமல் விரோதப்பட்டிருக்கும்போது ஸாக்ஷாத் ஸஹோதரர்களே சேர்ந்துமுயன் றாலும் அதன் பயன் கண்டெடுக்கமுடியாதென்பது மாத்திரமல்ல; விபரீத மாகவும் முடிந்துவிடுமென்பது நீதியறிந்தவர்கள் தெரிந்துகொண்ட விஷ யமே. அப்படியிருக்கையில் ஸ்வராஜ்யமென்ற பயனுக்காகப் பாடுபடும் நம் இந்தியவாஸிகளோ ஒற்றுமைப்பட்ட அபிப்பிராயமுள்ளவர்களாக நினைக்கமுடியவில்லை. ஏனெனில் இவர்களிற் சிலர் பரலோகமொன்றுண்டு என்பதையும், அதற்குபிரத்தியக்ஷானுமானாதிகளைத்தவிர வேறொரு பிரமா ணமொன்றிருக்கவேண்டுமென்றும், அந்த லோகங்களுக்கும் அவ்வுலக வாஸிகளுக்கும் நியந்தாவாக ஒருவரிருக்கவேண்டுமென்றும் பிரமாணங் களால் நிர்ணயிக்கப்பட்டிருப்பதையும் நினைக்காமலும் அதைப்பற்றி நினை வூட்டியவர்களது சொல்லைக் கேட்காமலும் தோன்றியபடி பேசுகிறார்கள். வேறு சிலரோவெனில் பரலோகமேபிரதானமெனவும், இம்மைப்பயனைப் பெரிதாக நினைத்து ஜன்மத்தை வீணாக்கிவிடக்கூடாதெனவும் அதற்குப் பிரமாணம் வேதமெனவும் அதிற் கூறியபடிதான் நடக்கவேண்டுமெனவும் அப்படி நடக்க காலதேசாதிகள் ஒத்துவராவிடில் ஸம்பவித்தவரை சரிவர அனுஷ்டித்துவிட்டு முழுமையும் அனுஷ்டிக்கமுடியவில்லையென பச்சாத் தாபத்துடன் அதில் சிரத்தையைப் பாராட்டவேண்டுமெனவும், ஒரே பிடி வாதமாய் நிற்கின்றார். ஆகவே இவ்விருதரத்தாரும் அபிப்பிராயபேதம் உடையவர்களாய்விட்டதிலிருந்து ஒற்றுமையடைய வழியில்லை. இதோர் புறங் கிடப்பினும் சில நாட்களாக மதாசாரவிஷயத்தில் புகுந்து அதை மாற்றவும் நசிப்பிக்கவும் பெருமுயற்சி செய்பவரும் அந்தப் பழைய வழக் கத்தை நிலைநாட்ட முயற்சிப்பவருமாகப் பெரியதோர் சூழ்ச்சியைச் செய்துவருகின்றனர். பரலோகமில்லை, வேதமில்லை, சாஸ்திரமில்லை, தெய்வமில்லை, வர்ணாசிரமாசாரமில்லை, மதமில்லை என்று வாதிப்பவர் ஒரு சிறு வகுப்புக்காரராகவே காணப்படுவதால் பெரும்பான்மையோர் கொண் டுள்ள கருத்தை எப்படி மாற்றமுடியுமென்று சிலர் அங்கும் போகமுடியா மல் இங்கும் வரமுடியாமல் நடுவில் நின்று நடுங்குகின்றனர். தீண்டாமை யை யொழித்து வர்ணாசிரமதர்மத்தைக் கெடுத்து அடையப்படும் ஸ்வராஜ் யம் வேண்டவேவேண்டாம். இதற்காகப்பொதுவாக நம் பாரதநாட்டைச் சுட்டிக்காட்டி பாரதமாதாவுக்காகப் பாடுபடுகிறோமென்று சிலர் பாடுபட வும் வேண்டாமென்று ஆர்யர் தீர்மானிக்கின்றனர்.

பத்திராதிபர்,

ஆர்ய தர்மம்.

சுக்ல-௵ மார்கழி-மீ ௧௯௨

தேசநலத்திற்கு தர்மத்தை மாற்றலாமா?

தேசநலத்திற்காகப் பாடுபடுகின்றவர்கள் அத்தேசத்திற்கும் அதுபோன்ற வேறு அனேக தேசங்களுக்கும் அதிபதியான சக்கிரவர்த்தியின் சட்டதிட்டங்களுடைய நோக்கப்படி பாடுபட்டால் அதன் பயனாக அமையும் தேசநலம் நீடித்து நிலைத்திருக்கும். அப்படிக்கில்லாமல் ஜனஸமூகத்தாராகக்கூடி பலாத்காரமாக ஒரு நலத்தைத் தேடிவைத்தால் அது சக்கிரவர்த்தியின் அந்தரங்கத்திற்கிசைந்ததாயில்லாமையால் ஒருவாறு பலாத்காரமான ஜனஸமூகநிர்ப்பந்தத்தினால் அது மேலுக்கு அங்கீகரிக்கப்பட்டது போல ஏற்றுக்கொள்ளப்படினும் ஒருஸமயத்தில் மாற்றிவிடவேண்டியதாகக் கருதப்பட்டு உபபலம் நேரிடும்பொழுது அடியோடு மாற்றப்பட்டுவிடும். ஆகவே அது நலமாகவே பாவிக்கமுடியாது. நீடித்து நிலைக்கும் நலம்தான் நலமேயொழியக் கண்டதுமழிவதெல்லாம் நலமாய்விடாது. ஆகவே தற்போது ஸ்வராஜ்யத்திற்காகப் போராடும் கக்ஷியினர்களுக்கு பலாத்காரமென்பதின் மாறுவேஷம் பூண்ட ஸாத்வீகச்சட்டமறுப்பின்மூலம் ஒருவாறு ஸ்வராஜ்யம் கிடைத்துவிட்டாலும இப்பொழுது "மதாசாரவிஷயத்தில் தலையிடுவதில்லை" என்ற பூர்வீகர்களுடையதும் தன்னுடையதுமான வாக்குறுதியைமீறி விவாஹம் முதலிய மதாசாரத்தில் ராஜாங்கம் தலையிட்டுவிட்டதுபோல் தற்போதுள்ள சில நிர்ப்பந்தத்திற்காகக் கொடுத்த ஸ்வராஜ்யத்தைப் பிடுங்கிவிட ராஜாங்கத்திற்கு உரிமையும் சக்தியுமிராது என்று நினைப்பதற்கில்லை. ஒரு ஸமயம் வைதிகமதாசாரக்குறைவைக் கருதிய ராஜாங்கம் அதற்கிணங்கிய ஸ்வராஜ்யக்கக்ஷியின் நிர்ப்பந்தத்தை உறுதிப்படுத்திவிடுமாயினும் இம்மண்ணுலகத்தைப்போல் விண்ணுலகத்திற்கும், எண்ணிறந்த மற்ற உலகங்களுக்கும் ஸ்வதந்திர அதிபதியான பா

மேசுவரனது ஆக்ஞாரூபமான வேதசட்டத்தின் நோக்கத்திற்கு அது விரோதமாயிருப்பதுபற்றி அந்தர்யாமியான அந்த பரமேசுவரனால் ஒரே ஸங்கல்பத்தினால் நொடிப்பொழுதில் அந்த வர்ணாசிரமதர்மவிரோதமான ஸ்வராஜ்யமும் பராராஜ்யமும் மாற்றிவிடப்படுமென்பதில் ஸந்தேஹமேயில்லை. இதற்கு உதாஹரணம் நம் பாரதபூமியில் இக்கலியிலேயே கண்டழிந்துபோன கணக்கற்ற ராஜ்யங்களே. இது பௌத்த ஜைனாதிகளின் சரித்திரஆராய்ச்சி செய்தவர்களுக்கு உள்ளங்கைக் கனி. தீண்டாமையைக் கற்பித்தவர் மனிதரல்ல, தேவரல்ல, ஸர்வேசுவரனே. அதையொழிக்கத் தலையிட்டால் தீண்டாமையொழித்தலையொழிக்க அவர் ஸங்கல்ப்பிப்பார். அப்படி அவர் ஸங்கல்ப்பிப்பாரா? ஸங்கல்ப்பித்தால் அதுதான் உசிதமாகுமா? அவர் எல்லோருக்கும் பொதுவானவர் அல்லவா? அவரிடம் இவ்விதக் கற்பனையே தகுதியற்றதல்லவா? என்பதாதியாகச் சிலர் கல்லும் கரைந்துருகும்படி கருணையாய்ப் பேசுவார்கள். அது வாஸ்தவந்தான் அவர் இப்படி ஸங்கல்ப்பித்துவிடுவார் என்ற கற்பனை யாருங் கற்பித்ததல்ல. ஆனாலிதை அவரே ஸாக்ஷாத்தாகக் கூறியிருக்கிறார். அதாவது கீதையில்—

तानहं द्विषतः क्रूरान् संसारेषु नराधमान् ।
क्षिपाम्यजस्रमशुभानासुरीष्वेव योनिषु ॥

"அவ்வாறு என்னை துவேஷிக்கின்ற குரூரர்களான அஸுர ஸ்வரூபிகளாகிய நராதமர்களை (தாழ்ந்த மனிதர்களை) ஆஸுர யோநியி (பிறப்பி) லேயே தள்ளுகிறேன்."

என்று கூறுகின்றார். இப்படி ஒருவர் கற்பித்து எழுதிவைத்தது தானேயென்றால் 'தீண்டாமையொழிப்பதே தேசஸேவை' என்றது தற்காலத்தியவர் கற்பித்து எழுதிவைக்கிற எழுத்துத்தானே? அதுமாத்திரம் அனாதியாயுள்ளதா? அன்றியும் நாம் செய்யும் காரியங்களுக்கு பயனையளிப்பவர் தற்காலத்தியவரல்ல. இப்பிரபஞ்சத்தை ஆக்கவும், அளிக்கவும், அழிக்கவும் பூர்ணஸ்வாதந்திரியம் பெற்ற பரமேசுவரன்தான் பயனளிப்பவர். சௌசம், ஆசௌசம் முதலியவைகளைப் பிரித்தவர் அவரேயன்றி வேறொருவருமில்லை. அவர் சிலருக்கு ஆசௌசத்தை விதித்திருந்தால் அதை அழிக்க ஒருவனிருக்கிறானா? தான் அழித்துவிட்டதாக ஒருவன் அகம்

பாவம் கொண்டானேயாகில் அவனகத்தையடக்க அவருக்குச் சக்தியில்லையென்று துணிவது அசட்டுத்துணிச்சலாகும்.

परित्राणाय साधूनां विनाशायच दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

என்று பிரதிக்ஞைசெய்த ஸர்வக்ஞனுக்கு அது மறந்துபோயிருக்குமென்று நினைக்க இடமில்லை. ப்ரம்மதேவரது ஐம்பத்தோராவது ஆண்டின் முதலாவது நாளின் பகலாகிய இச்சமயத்திற்குக் கீழ்ச் சென்ற எவ்வளவோ சதுர்யுகங்களில் ஒரு சதுர்யுகத்தின் பத்தில் ஒரு பாகமான இந்தக் கலியுகத்தில்மாத்திரம் முந்திய கலியுகங்களைவிட அதிகமான விசேஷம் யாதொன்றுமிருக்க நியாயமில்லை. பிரகிருதமான வைவஸ்வதமன்வந்தரத்தில் கீழ்க்கடந்த 27-கலியுகங்களில் அழிபடாமல் நாளதுபரியந்தம் நீடித்துவந்த வர்ணாசிரமதர்மத்தையும் ஜாதிபேதத்தையும் அழித்துவிட யாராலும் முடியாது. வருங்காலத்தில் எவ்வளவோ மன்வந்தரக்கணக்காக நிலைபெற்றிருக்கப்போகிறதேயன்றி அல்ப்பாயுஸ்ஸாகப் போகக்கூடியதல்ல. இதெல்லாம் கட்டுக்கதைதானேயென்றால் இப்படி வாதிப்பவர் கூறுங் கதையெல்லாம் வெட்டிக்கதையேயன்றி வேறல்ல. ஜாதியையொழிக்க முயலுகிறவர்களும் அவர்களெடுத்த கக்ஷியை ஸ்தாபிப்பதற்காக சிபிசக்கிரவர்த்திகதை,நளசக்கிரவர்த்தி கதை முதலிய கதைகளைச் சில விஷயத்தில் பிரமாணமாகக் கொடுக்கின்றார்களே. அந்தக் கதைகளிலேயே அந்த மன்னர்கள் வர்ணாசிரமதர்மத்தைப் பரிபாலித்த கதையும் ஜாதிபேதத்தை ஸ்தாபித்த கதையும் விரிவாகக் கிடந்துள்ளது இவர் கண்ணிற் படாமற்போனது என்னையோ தெரியவில்லை. அசக்கியமான காரியங்களில் தலையிட்டு ஏதோ சில சுயநலத்தைக் கருதி தேசத்திற்குழைப்பதுபோல் வஞ்சித்துவரும் வஞ்சகர்களுடைய சூழ்ச்சியில் அகப்படாமல் பரமேசுவராக்ஞைக்கடங்கியே நின்று யாவரும் சிரேயஸ்ஸையடைவார்களாக.

சுபம். பத்திராதிபர்.

கலிவைபவம்.

பிரியநேசர்களே !

இத்தேசத்தைப் புண்ணியபூமியென்றும், க்ஞானபூமியென்றும் சர்வஜீவர்களும் தத்தம் கர்ம பலத்தை அனுபவிக்கும் பொருட்டு ஜென்மமெடுப்பதற்குரிய தேசமென்றும் ஈச்வராபிமுகமாய்ப்பிரவர்த்தித்துள்ள ஒவ்வொரு முமுக்ஷுவும் தாமடைய விரும்பும் மோக்ஷபதவியை எளிதில் ஸாதிப்பதற்கு வந்தடைய வேண்டிய பூமியென்றும், சாந்தம், கருணை, பரிசுத்தம் தபஸ், க்ஞானம், தர்மானுஷ்டானம், வேதம் ஓதுதல் இது முதலியவற்றால் மேன்மை வஹித்து விளங்கும் மகரிஷிமண்டலத்தை உடைய தேசம் என்றும், சமயபக்தியுடைய நாடென்றும் போற்றப்படுவதெல்லாம் கலிகாலவைபவத்தால் எண்ணமாத்திரமாகவேமுடிந்துவிட்டது. அந்தோ ! என்ன விந்தை இது !! ஸநாதன தர்மமாகிய நமது மதமானது க்ஞானபாகமென்றும், கர்மபாகமென்றும் இருபகுதியுடையது. க்ஞானபாகமென்பது ஆத்மலக்ஷணம், ஈச்வரலக்ஷணம், ஜீவேசுவர சம்பந்தம், சக்தியுபாயம் முதலியவற்றைப்பற்றி கூறுவதாகும். கர்மகாண்டமோ நமக்குச் சிறப்புவகையாய் அமைந்துள்ள ஆஹார வியவஹார, விவாகாதி ஆசார, அனுஷ்டான முறைமைகளைப் போதிப்பதாகும். இப்படிப்பட்ட தர்மபூமியிலே லோகாயதமதமென்னும் அக்கினிஜ்வாலை மேற்றிசை யார் ஆசாரசீர்திருத்தக்காரர்கள் இவர்களின் உபன்யாஸம் என்னும் காற்றின் சம்பந்தத்தால் கொழுந்துவிட்டெரிந்து ஸநாதனதர்மிகளை அடியோடு அழித்துவிட்டது. பிராசீனகாலம்முதல் அறம், பொருள் இன்பம், வீடு என்னும் சதுர்விதபுருஷார்த்தங்களுக்கும் பிறப்பிடமாயுள்ளதும், மஹரிஷிகளின் பாதாரவிந்தங்களால் பவித்ரமாயுள்ளதுமான நமது ஆர்யாவர்த்தமும் அனார்யர்களால் அடியோடு அழிந்துவிட்டதே !

நமது பாதநாட்டின் நிலை இங்ஙனம் தீனஹீன ஸ்திதியில் இருக்கும்படிநேர்ந்ததை நெடுங்காலமாய் பல இன்னல்களை அனுபவித்தும் நாம் அனுதாபத்தை அடையவில்லை. நமது புராதன ஆசாரங்களும் $\frac{3}{4}$ நூற்றாண்டாக சீர்திருத்த சங்கங்களால் துர்பல

ஸ்திதியை அடைந்துவிட்டன. அச்சங்கக்காரர்கள் கைக்கொண்ட சாதனங்களனைத்தும் நமது ஆரியாவர்த்த ஆசாரங்களையழிக்க மாத்திரம் சக்தியுற்றனவாயிருந்தனவேயன்றி அவ்வாசாரங்களின் ஸ்தானத்தில் வேறு யாதொரு நூதன ஆசாரங்களையுமுண்டாக்க சக்திபெறவில்லை. மேலும் சமது மதத்தைக் காப்பாற்ற வேத வாக்கியங்களுக்கு வேறு அர்த்தம் செய்வதும் அல்லது மற்ற எவ்வித அயோக்யக்கனமான குயுக்தி செய்வதும் மகரிஷிவம்சத்தில் ஜனித்த நம்மவரில் சிலரும் தலைப்பட்டுவிட்டனர். வாசகர்களே! சாஸ்திரவிஷயங்களில் இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளை எக்காலத்தும் எதிர்க்கமுடியாத நம்மதத்தை ஸ்தாபித்த மகரிஷிகளைத்தலைவர்களாகப் பாவித்து, வந்தித்து வாழ்த்துவோமாக. தற்கால ஐரோப்பிய சாஸ்திர ஆராய்ச்சிகளெல்லாம் நமது முன்னோர்களால் பல யுகங்களுக்கு முன்னமேயே தங்கள் க்ஞானசக்தியினால் கண்டுபிடிக்கப்பட்டனவென்பதை மறக்கக் கூடாது. அயல்நாட்டார் ஆரியர்கள் எல்லோரையும் ரஹஸ்யமாகவும், பஹிரங்கமாகவும், சட்டமூலமாகவும் இழிவுபடுத்துவதற்கு காரணமாகிய ஆபாஸங்களுக்கெல்லாம் மூலஸ்தானம் நாமே என்பதை வெட்கத்துடன் ஒப்புக்கொள்ளவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இந்நாட்டிலுள்ளவர்களின் மேல் ஏற்பாட்டிற்கும் பல அக்ரம நிந்தைகளுக்கு நாமே காரணபூதரானோம். இனி நாம் இத்தகைய குற்றங்களுக்கெல்லாம் காரணம் நாமே என்பதை அறிந்து நம்மை ரக்ஷித்துக்கொள்வதற்காக நமது மதத்தின் உண்மையை அறிந்து உய்யும்படியும் செய்யவேண்டும். தேசாபிமானம், ஒற்றுமை, நம்பிக்கை, இவைகொஞ்சங்கூட இல்லாமல் அன்னிய தேசத்தாருடைய அடிகளில் அடிமைகளாக அடங்கிக் கிடக்கும் இந்நாடு சுய ஆக்ஷியுடன் விளங்குவதற்கு நமக்குள் இருக்கும் குற்றங்களை விலக்கிக்கொள்ள வேண்டாமா? ஆகவே நமது நாட்டில் தற்காலம் நேர்ந்திருக்கும் துராசாரங்களை சங்கிரஹமாக பிரசங்கிப்பாம். கலி வைபவத்தால் பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற வியவஸ்திதபேதம் அனேக நூற்றாண்டுகளாக அகன்றுவிட்டது என்பது வெளிப்படை. தாழ்ந்த வகுப்பு ஸ்திரீகளிடத்தில் பிராமணர்களும், பிராமணஸ்திரீகளிடத்தில்சூத்திரர்களும், சம்பந்தம் வைத்துக்கொண்டதனால் உலகமே ஸங்கா

ஜாதிமயமாக ஆய்விட்டது. கள் குடிப்பதும், தாசீ கமனமும், சிங்காரமாகப் பாடுவதும், அதிகமாய் பரவி விட்டது. சுருதி ஸ்மிருதிகளும், குருகுலங்களும், ஆச்ரமதர்மங்களும், வேதாத்தியயனமும், பிராணாயாமமும், தபஸ்களும், ஸித்திமார்க்கங்களும், ஐயோ இருந்தவிடம் தெரியவில்லையே !

கலிபுருஷனின் அரசாக்ஷியில் நமது ஆரியச்சிறுவர்கள் சாப்பாட்டுக் கடைகளிலும், சத்திரங்களிலும் சமயல் பண்ணுவதும், சவிண்டிச்சோறு உண்ணுவதும், சோத்துக்கடை வைப்பதும் இழிவான தொழில்களைச் செய்வதுமாக காலம்கழித்து வருகின்றார்கள். (தொடரும்)

V. ஜதீசுவரசாஸ்திரிகள்,
ஸ்ரீமடம் உபன்யாசகர்

ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு.

ஏற்கனவே யான் எடுத்துக்கொண்ட "விவாஹவயோநிர்ணயம்" என்னும் வியாஸத்தை ஜனமித்திரனில் வேதம் முதலானப் பிரமாணங்களில் நம்பிக்கையும், அறிவும், அநுட்டானமும் சிறந்து விளங்கும் பெரியோர்களின் கருத்தையே மூலமாகக்கொண்டு, வெளிவருவதாக பத்திரிகை நேயர்கள் அறிந்திருப்பார்கள்.

முன்னொரு வியாஸத்தில் "ஓர் அறிவிப்பு" என்ற விஷயத்தில் சில வாதிகளின் மொழிகள், சாஸ்திரிகள், மடாதிபதிகள் முதலான பெரியோரிடத்தில் ஒழுங்கீனமாக உபயோகப்பட்டிருப்பது நன்றன்று என்று காரணத்துடன் கூறி, இதேமாதிரி எழுதுவதற்கு இடங்கொடாமலிருந்து எனது "விவாஹவயோ நிர்ணயம்" என்ற வியாஸத்தை முடிவுபெறும்வரை பார்வையிட்டு முன்னோர்களின் நோக்கத்தை ஐயமற அறிந்துகொள்ளவேண்டும் என்று எழுதி உள்ளேன்.

ஆயினும் சென்ற கார்த்திகை-மீ 14வயில் ஜனமித்திரனில் வெளிவந்த "பால்யவிவாஹ நிக்ரஹச்சட்டம்" என்ற வியாஸத்தைப்பார்க்க ஓர் புறம் கலிகாலவிந்தையும், முன்னோர்களின் உண்

மையான நெறியில் பற்றுள்ளவர்களுக்கு ஓர் மனக்கொதிப்பும் உண்டாக இடமிருக்கிறது.

இம்மாதிரி வியாஸங்களால் மஹாதபஸ்விகளான நம்முன்னோர்களுக்கு குறைகூறத் தலைப்படுகின்றவர்கள் எங்கேயிருந்து குதித்தனரோ தெரியவில்லை. யோசிக்குமிடத்து அம்மாதிரி அடமாய் கூறுவது அவர்களுக்கு சாலவும் பொருந்தாது. அவர்களும் முன்னோர்களின் குலத்திலிருந்தே உண்டாயிருப்பதால் அவர்களுக்கும் அது ஒவ்வாததே. ஒருசமயம் ஸ்வதேசபாஷை, பழக்கம், பெரியோரிடம்நடந்துகொள்ளும் மாதிரி முதலானவைகளில் அனுபவமில்லாமல் செய்யும்படி காலதோஷத்தால் ஏற்படுகின்ற பரதேசிகளின் பாஷை, நடவடிக்கை முதலானவைகளின் பழக்கத்தால் இவ்வாறு எழுதுவதற்குத் தோன்றலாம். அல்லது இக்கலியிலும் வேதாதிப் பிரமாணங்களை திடமாக நம்பி, ஒவ்வொரு கிராமங்களிலும் வர்ணாசிரமப்படி தர்மானுஷ்டானஞ் செய்பவர்களை உத்ஸாகப்படுத்த முன்வரும் மஹான்களுக்கு ஆக்ரோசத்தை உண்டாக்கினால் அடிக்கடி பத்திரிகையையே வேதவாக்கியமாக நம்புகின்றவர்களுக்கு அம்மஹான்கள் எழுதத் தொடங்குவார்கள். அதனால் அவநம்பிக்கை உள்ளவர்களும்ஒருவாறுவர்ணாசிரம தர்மங்களை நன்கறிந்து முன்னோர்களைப் பின்தொடரட்டும் என்ற கருத்தைக்கொண்டோ எழுதுகின்றனர் போலும்.

ஆகையால் பத்திரிகைநேயர்களோ, அல்லது பண்டைய கபடமற்ற ஆஸ்திகமார்க்கத்தை மறுத்து எழுதத்தலைப்படுகின்றவர்களோ வியாஸம் எழுதுவதில் துராக்ரஹம் வைக்காமல் நியாயத்தை ஏற்றுக்கொண்டு அதன்படி ஒழுகவேண்டும் என்று தொடக்கத்தில் அறிவித்துக்கொள்கிறேன்.

ஷிவியாஸத்தில் கண்ட சில அடாதமொழிகளைக் குறிப்பிட்டு கிரமமாய் பதில் கூறுகிறேன்.

1. வர்ணாசிரமிகள் அதிகக்கூச்சல்போட ஆரம்பித்துவிட்டார்கள்.

2. குருட்டுத்தனமான நம்பிக்கை உடைந்துபோய்விடும்.

3. வைதிகத்தொழிலாகக் கொண்டவரும்

4. பழைய நூல்களைப் படித்திருப்பதாக மதிக்கப்பெற்றிருக்கும் படிப்பாளிகளும்.

5. அவர் கிளிப்பிள்ளைகளைப்போல் சொன்னதைச் சொல்லும் யோக்கியதைமட்டில் உடையவர்.

6. சரித்திர ஆராய்ச்சியின் எதிர்நிற்காத படிப்பு.

7. பிறட்டானவசனங்களை எடுத்துச்சொல்வதற்குப் புராணங்கள் இடங்கொடுக்கின்றன.

8. ஸமாவேசனம், கர்ப்பாதானம் என்று கூறப்படும் புணர்ச்சி செய்யவேண்டும் என்று அறநூல்கள் விதிக்கின்றன.

என்பனபோன்ற இன்னும் அனேக மரியாதைக்குறைவான சொற்கள் காணப்படுகின்றன.

இவைகள் யாவும் நன்றல்ல என்று சென்ற கார்த்திகை-மீ 21உ வெள்ளிக்கிழமையில் வெளிவந்த ஆஸ்திகஸநாதனதர்மகாநாடு என்ற வியாஸத்தால் அறிஞர்கள் தெரிந்துகொண்டிருப்பார்கள். ஆயினும் தொடங்கிவிட்டபடியால் இங்கு அவைகளுக்குப் பதில் கூறுகிறேன்.

1. இவ்வாறு எழுதுகின்றவர்கள் வர்ணாசிரமிகளில் சேர்ந்தவரா? இல்லையா? சேர்ந்தவரென்றால் இந்த நிந்தைமொழி அவர்களையும் சாருமல்லவா? இல்லையெனில் அவர்களுக்கு தர்மோபதேசம் பண்ணுவதில் யாது பயன்? வாஸ்தவமான வர்ணாசிரமிகள்தான் கவலைகொண்டு இச்சட்டத்தை அநீதிகாமென்று நம்பி அதைத் தொலைக்கப் பாடுபடுவார்கள். கூச்சல் என்ற சொல்லுக்கு என்ன பொருள்? பரிஹாஸமொழியானால் அவர்களின் வாக்கால் வர்ணாசிரமிகளின் சொல் கூச்சல் என்று பிரமாணங்களைமுன்னிட்டுக்கூற சாத்தியப்படாது. அப்படிச்சொல்லத் துணிகின்றவர்கள் நன்கு ஆராய்ச்சிசெய்தால் அப் பரிஹாஸமொழி அவர்களையே சாரும். வர்ணாசிரமதர்மங்களை உள்ளபடி அறிந்து அநுஷ்டிக்க யோக்யதையும் ஆஸ்திக்யமும் இல்லாத பிறநாட்டார்களின் (Translation) மொழிபெயர்ப்பைப் பார்த்துத் தெரிந்துகொண்டதாக தற்புகழ்ச்சிசெய்துகொள்கிறவர்களல்லவா பிரமாணங்களை முன்பின் அறியமுடியாமல் சொல்வதால் அவ்விதமாகும்.

2. குருட்டுநம்பிக்கை என்பதற்கு என்னபொருள்? தோன்றினபடி பிதற்றுகிற நாகரீகர்களின் சொல்லல்லவோ அவ்விதமாகும். பரமேச்வரனின் அநுக்கிரஹம் பெற்று ஞானக்கண்ணால் மூன்று காலங்களையுமறிந்த மனு, வஸிஷ்டர் முதலான மகாமுனிவர்களால் வெளியிடப்பட்ட வேதமூலங்களான ஸ்மிருதிகளல்லவா தலைமுறை தத்துவமாய் நம்மவர்களால் கொண்டாடப்பட்டு, அவைகளின்படி ஆசாரவியவகாரங்கள் பிழைபறச் செய்யப்படுகின்றன. ஆகையால் வர்ணாசிரமிகளுக்குக் குருட்டுநம்பிக்கை எனக் கூறுவது கனவிலும் பொருந்தாது,

3. வைதிகத்தைத் தொழிலாகக் கொண்டவரும் என்பதற்கு என்ன கருத்து? இப்படிக் கூறுகிறவர்களும் ஏதோ ஒரு தொழிலைப்பற்றிக்கொண்டே இருக்கின்றனர் என்று தலையங்கத்தாலேயே செவ்வெனக் காணப்படுகின்றது. அத்தொழிலைவிட, ஸ்வல்பலாபத்தாலேயே திருப்தியடைந்து மேல்நாட்டு நாகரீகத்தால் தர்மங்கள் அறிய சந்தர்ப்பம் பெறுததால் குருட்டுக் கண்ணர்களாகக் கூறுவதற்கு உள்ள நிலைமைபெற்றவரையும் கௌணபக்ஷமாகவாவது தர்மங்களை நடத்தச்செய்துவரும் வைதிகர்கள் உத்தமர்களல்லவா? அவர்களும் பணப்பேராசை பிடித்து இங்கிலீஷ் படித்து அஸத்தியமார்க்கத்தைக் கைப்பற்றிவிட்டால் நமது மதத்திற்கே தர்ப்பணாஞ்ஜலி செய்யவேண்டியதாகும் என்று முன்னமேயே கூறியிருக்கிறேன்.

4. பழைய நூல்களைப் படித்திருப்பதாக மதிக்கப்பெற்ற படிப்பாளிகளும் என்ற வாக்கியத்தில் படிப்பாளிகள் என்றுவது ஒரு நல்ல சொல் கலந்திருக்கிறது. ஆனாலும் பழையநூல்களைப் படித்திருப்பதாகஎன்ற வார்த்தையால் பழையநூல்களான வேதாதிகளுக்கே, மேன்மையோ சிறுமையோ இருவிதமாயும் தோன்றும்படி இருக்கிறது. மேன்மையாகக் கருதினால் வேதசாஸ்திரமறிந்தவர்களிடமிருந்தல்லவோ அதன்கருத்தை யறியவேண்டும். சிறுமையாக நினைத்தால் அவர்களுக்கு யாவராலும் தெளியப்படுத்தமுன்வரமுடியாது.

5. அவர் கிளிப்பிள்ளைகளைப்போல் சொன்னதைச் சொல்லும் யோக்யதை மட்டில் உடையவர் என்பது யோசிக்குமிடத்

துப்பெருமையாகவே ஆகும். வேதப்பிரமாணத்துக்குக் கட்டுப் பட்டுச்சொல்வதால் ஒரே தீர்மானமாகத்தான் வர்ணாசிரமிகள் சொல்வார்கள். அவைகளுக்கு அனுகுணமாகவே துராக்ஷேபி களுக்கு யுக்திகளாலேயும் பதில் கூறுவார்கள். ஆர்யதர்மம் முத லான மதப்பத்திரிகைகளை வாங்கிப்பார்த்தால் அஃது நன்று புலப் படும். காலத்திற்கேற்ற கோலம்என்றபடி பிறமதஸ்தர்கள் நம்மை ஏளனம்பண்ணி ஏதாவது ஒன்றை முன்பின்னறியாமல் மேல் பார்வைக்கு தோஷம்போல் படும்படி மேயோ முதலானவர்களின் புத்தகங்களை வெளியிட்டால் அதற்குத் தகுந்தபடி ஆங்கிலத்தில் பதிலுரைக்க சக்தியிழந்து நம்மவரையே திட்டத்தலைப்பட்டவர்க ளல்லவா கிளிப்பிள்ளைகள் போல் பிறரின் சொல்லைப் பின்பற்று கிறார்கள்.

6. சரித்திர ஆராய்ச்சியின் எதிர்நிற்காத படிப்பு என்பதற்கு என்ன பொருள்? சரித்திர ஆராய்ச்சி பண்ணினவர்கள் எவர்கள்? என்ன ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது ? அவ்வாராய்ச்சிக்கு யாது பிரமாணம் ? என்று கேட்கத் தொடங்கினால், பழிகூறுப வர்களின்படிப்பே வர்ணாசிரமிகளுக்கு முன்பு உபயோகப்படுத்தத் தகாதது. புருஷனுடைய புத்தி ராகத்வேஷங்களுள்ளதாயிருப் பதால் பௌருஷேயையான ஆராய்ச்சியிலேதான் ராகத்வேஷங்கள் குவிந்து முன்பின் முரண்பட்டிருக்கின்றன.

வர்ணாசிரமிகள், புருஷனால் ஆக்கப்படாததால் அபௌரு ஷேயமென்று சொல்லப்படுவதும், மூச்சுக்காற்று விடுவதுபோல் பகவானுடைய முகாரவிந்தத்திலிருந்து அனயாஸமாய் முன் முன் கல்பங்களுக்கேற்பட்டபடி மாறுபாடில்லாமல்ஒரேவிதமாய் வெளி வந்ததுமான வேதத்தையல்லவா பிரமாணமாகக் கூறுகின்றனர். அதில் ராகத்வேஷங்களுக்கு அவகாசம் எது ? மேலும் அதன் பொருளை தவத்தால் கண்டறிந்த ஸ்மிருதி கர்த்தாக்களல்லவோ அவர்களுக்கு தத்வத்தை வெளிப்படுத்துகின்றவர்கள். யுக்தியால் விதண்டாவாதம் பண்ணுவதால் உண்மை வெளியாகாது என்று வேதவியாஸரே "தர்க்காபிரதிஷ்டானாத்", என்று பிரும்மசூத்திரம் செய்திருக்கிறார். அதற்கு நமது பாமாசார்யாள் விரிவாக சாரீர கபாஷ்யத்தில் பொருள்கூறியுள்ளார்கள்.

7. பிறட்டான வசனங்களை எடுத்துச் சொல்வதற்குப் புரா ணங்கள் இடங்கொடுக்கின்றன என்பது பொருந்தாது. உபக்கிரமோவஸம்ஹாரம் என்ற மீமாம்ஸாநியாயமறிந்தல்லவோ பொருள் கூறவேண்டும். அப்படியறியாமல் புராணங்களுக்கு அர்த்தம் சொல்வதற்குப் புகுந்தவர்களுடைய அறிவில்லாமையல்லவா அம்மொழிக்குப் பாத்யமாகும். வேதார்த்தத்தை அறிவிக்க, இதிஹாஸங்கள் புராணங்கள் ஏற்றவைகள் என்று பாரதம் கூறுகின்றது. 'சிறிது கற்றவன் எனது அர்த்தத்தைக் கெடுத்துவிடுவான்' என்று வேதமே அறிவிக்கிறது.

बिभेत्यल्पश्रुताद्वेद: मामयं प्रतरिष्यति ।
इतिहासपुराणाभ्यां वेदं समुपबृंहयेत् ॥ इति ।

நமது பரமாசார்யாள் முதலான மஹான்கள் புராணங்களை அங்கங்கு ஆதாரமாகக் கையாண்டிருக்கின்றனர். ஸுப்ருபாக்கியானத்தால் பிறரின் சங்கையும், ஸமாதானமும் தெளிவாகும்படி முன் வியாஸத்தில் ஜனமித்திரனில் நன்கு வெளியிட்டுள்ளேன். ஆகையால் பிரமாணத்தை நம்பாமல் தோன்றினபடி பேசுகிறவர்கள்தான் ராகதுவேஷமுள்ளவர்களாய் காணப்படுவதால் பிராமாணிக கோஷ்டியிலிருந்துவிலக்கப்பட்டவர்களாவார்கள். இஹத்துவிஷயமோ பரலோகத்துவிஷயமோ யாவற்றையும் நமது பண்டைய நூற்கள் நன்றுகவெளியிடுகின்றன.

8. ஸமாவேசனம் கர்ப்பாதானம் என்று கூறப்படும் புணர்ச்சி செய்யவேண்டுமென்று அறநூல்கள் விதிக்கின்றன என்று எழுதினவர்கள் அந்த அறநூலை எடுத்து பொருள் கூறட்டும். அதற்கு விடையளிப்போம். அவர்கள் கருதும் மந்திரம் ஒரு ஸம்ஸகாரத்திற்காக ஏற்பட்டது மந்திரஜபமேயல்லது ஸம்போகம்என்று ஒரு கிரியையை வெளிப்படுத்த வந்ததல்ல. அப்படியானால் அதே ஸூத்திரத்தில் (अन्योवाएनामभिमन्त्रयेत्) 'அன்யோவாஏனாமபிமந்திரயேத்' என்ற வாக்கியத்திற்கு என்ன பொருள்? ஏதாவது ஸௌகர்யத்திற்குக் குறைவு ஏற்பட்டால் வேறு யாராவது இந்த மந்திரத்தை உச்சரிக்க வேண்டுமென்றல்லவோ பொருள். அவர்கள் சொல்லியபடி ஸம்போகம் என்று அர்த்தங்கொண்டால் பதியில்லாத எவனோ ஒருவன் அந்த கார்யத்தைச்செய்யலாம் என்று

ஏற்படும் எந்த் மதியீனன் தான் அவ்விதம் செய்யத் துணிவான். ஆகையால் இம்மாதிரி முன்பின் அறியாமல் வேதத்தை நம்புவது போல் ஒரு சமயம் பாசாங்குபண்ணுகிறவர்களும், மேல்பார்வையில் தங்களுக்கு அனுகூலம் போல் தோன்றும் வாக்கியங்களை மட்டிலும் எடுத்துக் கூறுகிறவர்களும் சாஸ்திர ஆராய்ச்சி செய்கிறவர்களின் கோஷ்டியில் முன்னின்று வாதம்பண்ணினால் ஒழுங்காகும். பத்திரிகைகளில் சப்தஜாலங்களை இரைப்பதால் வர்ணாசிரமதர்மங்களைக்கெடுத்துவிடலாம் என்பது முடியாது. பகவத்கீதையை நித்தியமும் படிக்கிறீர்களே ? "அதர்மங்கள் வெளியில் பாவும்போது அவதாரம்பண்ணி தர்மங்களை நிலைநாட்டுகிறேன்" என்ற பொருளுள்ள ச்லோகங்கள் தங்கள் போன்றவர்களுக்குத் தென்படவில்லையா ?

சாஸ்திரரீதியாக தங்களைக்காட்டிலும் கேள்விகளும் சமாதானங்களும் தெரியவேண்டுமானால் பத்திரிகைகளில் எழுதுவதை விட்டு வயோநிர்ணயம். பரிணயமீமாம்ஸா என்ற நூல்களைப் பண்டிதர்கள் மூலமாய் ஆராய்ச்சி செய்யுங்கள். அதனால் வாஸ்தவார்த்தங்களைத் தெரிந்து லோகத்திற்கு நல்லவழியில் பாடுபடுங்கள் என்று மித்திரனாகவே அறிவிக்கிறேன்.

K. V. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

கலிகால கோலாஹலம்.

பிரகிருதத்தில் எங்கும் தாண்டவமாடும் சாரதாசட்டத்தைப் பற்றி அநுகூலம்போல் நியாயஅநியாயங்களை எடுத்துரைப்பதற்கு வெளிவந்தவர்கள் பலராயினும் ஒழுங்காக நிலைநாட்டத் தலைப்படுகிறவர்களாகக் காணப்படுகிறவர்கள் சிலரே. சாரதா சட்டம் காலத்திற்கேற்றவாறு அநுகூலமே விளைவிக்கப்போகின்றது என்று குருட்டுத்தனமாயும், அடமாயும் பேசுவதோடுநில்லாமல் பத்திரிகைகளில் முன்னோர்களையும் மதியீனர்களென்று நெஞ்சந்துணிந்து வரைகின்றவர்களை இனி அவ்விதம் எழுதாது அடங்கிவிடும்படி செய்யத்துணிகின்றவர்கள் சிறிதுபேர்கள்கூடக்காணப்படவில்லை. ஜனமித்திரனில் நவம்பர் 29வ யில் "ஸனாதனதர்மம் யாது" என்று

காணப்பட்ட வாக்கியங்களை விமர்சித்துக்கண்டனம்பண்ணி எழுதினதை பத்திராதிபர் அவர்கள் மேன்மேலும் எழுதிவரும்படி நேர்வதால் கலஹம் வளர்வதற்கு இடமாகுமென்று நிறுத்திக்கொண்டேனென்று எனக்கு எழுதிவிட்டதால் என்னுடைய விஷயம் அப்பத்திரிகையிலேயே வாராமலிருக்கும்படி நேர்ந்ததில் ஒருவாறு மனத்தாங்கல் ஏற்பட்டது. ஆனாலும் ஆர்யதர்மம் என்ற பெயரை பொருள்பொருந்தினதாகச்செய்துகொண்டு பிறருடைய ஆபாஸமான நிந்தைமொழிகளைக் களைவதில் ஊக்கத்துடன் வெளியாக்கப்பட்ட மறுப்பைப் பார்த்தபிறகு எனக்கு அந்த மனத்தாங்கல் ஒருவிதமாக சிறிது சாந்தமாயிற்று.

இம்மாதிரி ஆர்யதர்மத்தில் எழுதிவருவதோடு நில்லாமல் மற்ற பத்திரிகைகளிலும் மறுப்பு எழுத முன்வரவேண்டும். மற்ற பத்திரிகைநேயர்கள் அனேகமாய் வைதிகபிரமாணத்தை எழுதினால் பிரசுரிக்க முன்வாராததோடு ஆபாஸமான நாஸ்திகத்தன்மை வாய்ந்த விஷயங்களையே பெரும்பாலும் வெளியிட குதூஹலம் அடைகின்றனர். இது கலியின் கோலாஹலமே.

இக்கோலாஹலம் சாஸ்திர ஆராய்ச்சிக்கு முன்னில்லாது. ருதுமதீவிவாஹத்திற்குச் சாதகம்போல் வெளிப்பார்வைக்குத் தோன்றும் விஷயங்களை எடுத்துக்கூறி அவர்கள் அதோடுதிருப்தியடைந்துவிடுகிறார்கள். முன்பின் விரோதத்தைக் கவனிக்கின்றார்களில்லை. தங்களுக்குத் தோன்றும் ஆபாஸயுக்திகள் சில தோன்றினவுடன் வேதாகமப் பிரமாணமே தங்களுக்குச் சாதகமென்று ஆரவாரஞ்செய்கின்றனர்.

சாஸ்திர ஆராய்ச்சியிலேயே பாடுபடுகின்ற சில மஹாபண்டிதர்கள் அவைகளைப்பூராவாயும் முன்பின் எடுத்துக்காட்டினால் வைதிகமார்க்கத்திலிருந்து நழுவி சாஸ்திரமொருபுறமிருக்கட்டும். தற்காலத்திற்கு ருதுமதீவிவாஹம்தான் சாலச்சிறந்தது. அப்படி அனேககாரியங்கள் சாஸ்திரத்தில் அறிவிக்கப்படுவதை அங்கீகரித்துக்கொண்டால் ஸ்வயராஜ்யம் கிடைக்காதென்று காங்கிரஸ் கக்ஷிக்காரர்கள் செப்புகின்றனர். அவர்களை இவ்வாறு கேட்போம். ஸ்வயராஜ்யமென்றால் என்ன? தேசலாபம் என்றார்களானால் தேச விஷயத்தில் ஒற்றுமையாயிருக்கவேண்டிய விஷயத்தில் தர்ம விரோதமாக இல்லாமலிருந்தால் யாவரும் ஒற்றுமைப்பட்டவர்களே.

பகவான் பிராணிகள் ஒவ்வொன்றிலுமே அறிவில் ஏற்றத் தாழ்ச்சியை அவரவர்களின் கன்மாவுக்குத் தக்கபடி அளித்திருக் கிறுர். விசேடமாக மானிடப்பிறவியில் விவேகத்தை அதிகமாக அளித்திருக்கிறுர். அதோடு நில்லாமல் தர்மாதர்ம வியவஸ்தையை வேதசாஸ்திரங்களால் வெளியிட்டிருக்கிறுர். கண்ணுக்குப் புலப் படாதவிஷயங்களே அறிவதற்குச் சாஸ்திரமே கண்ணுகின்றது. அக்கண்ணுல் ஏற்படுகிற ஸ்வயராஜ்யம்தான் பெரிதானது. அவ் விஷயத்தில் நாம் ஒழுங்கீனமில்லாமலிருந்தால் நச்வரமான ஸ்வய ராஜ்யம் அடைவதில் யாது பயன் ?

இவ்வுலகில் எத்தனே ஜனங்கள் தரித்திரர்களாயும் ரோகிகளா யுமிருப்பதைக் கண்கூடாகப்பார்க்கிறேம். அவர்கள் அனுபவத் தில் என்ன சொல்லுகின்றனர். ஈசனே இந்த உலகவாழ்க்கையில் ஜனன மரண ப்ரவாஹத்தில் புழுக்கள்போல்ச்சுழலும் எங்களேக் கரையேற்றி மோக்ஷமென்கிற கரையில் சேர்க்கக்கூடாதா என் றல்லவோ சொல்லிப் புலம்புகின்றனர். அவர்களேப்பார்த்து நாம் தெரிந்துகொள்ளவேண்டியது என்ன? ஈச்வானுடைய ஆஞ்ஞை யான வேதப்பிரமாணத்தை நம்பி அதன்படி ஒழுகி, மோக்ஷத்தை யடைய யத்தனிப்பதல்லவோ முக்கியமென்று ஏற்படுகிறது. இவ் வைதீகத்துறையில் இறங்காமல் சாஸ்திரவிரோதமாக ருதுமதீ விவாஹம், சண்டாளர்களின் ஆலயப்பிரவேசம் என்று ஓய்வில்லா மல் பத்திரிகைகளில் எழுதுவதால் அவர்கள்நாடும் ஸ்வயராஜ்யம் ஏற்படப்போகிறதில்லே. ஆனுலும் கலிகாலமென்று சொல்வதை ஆதாரமாகக்கொண்டு தோன்றினபடியெல்லாம் பிதற்றத்தலேப்படு கின்றவர்களுக்கு அனேக பத்திரிகைகள் இடங்கொடுக்கின்றன. பிரமாண நூற்களே எடுத்துரைப்போருக்குஅப்பத்திரிகைகள் இடங் கொடாமலிருக்கின்றன என்பதே கலிகால கோலாஹலமெனச் சொல்வதற்குப் போதுமான அத்தாக்ஷி.

ஸனுதனமான வைதிகமதத்தை அழித்துவிடலாமென்று கோருவதோடு நில்லாமல் ஸனுதன தர்மிகளுக்கு இடையூறுகளேச் செய்து இஷ்டத்தைசாதிக்கும்படிச்செய்துவிட்டோமென்று கூறு கின்றவர்கள் தன் முன்னேரின் பெருமையை உணர்ந்தாரில்லே. காலசக்கிரம் தற்காலம் அநீதியாய் உருண்டுவருகிறது. ஸரியான வழியில் செல்லாமல் காலசக்கிரம் பெரும்பள்ளம்போன்ற நாகக்

குழியில் தள்ளிவிடுகின்றது. ஆனாலும் காலச்சக்கிரம் மனம் போனபோக்காகச் சுற்றுகிறபடியால் அறிஞர்கள் மனதை வைதிகப்பிரமாணத்தால்நிலைநிறுத்திவிட்டால் அவைகளுக்கு அது வசப்பட்டு மேன்மேலும் சமமான வழியாய் சுற்றிக்கொண்டு அடைய வேண்டிய அழிவில்லாத பேரானந்த வழியிலேயே நின்றுவிடுகிறது. மனதைக் களங்கமறச் செய்துகொண்டபடியினாலேயே நமது முன்னோர்கள் பெருமையுடன் உலகில் வாழ்ந்து நல்ல நீதிகளை மக்களுக்குக் கற்பித்து விண்ணுலகமேகினார்கள்.

கலிகாலகோலாஹலத்தால் அம்முன்னோரை அறிவீனர்கள் என்றும் மேல்நாட்டு நாகரீகத்தில் பழகின தாங்களே அறிவாளிகள் என்றும் தங்களைத் தாங்களே பத்திரிகைகளில் எழுதிச் சிறப்பித்துக் கொள்ளுகின்றனர்.

நம் முன்னோர்கள் வேதப்பிரமாணப்படி ஒழுகி தங்களது பெயரை எங்கும் பரவச்செய்தனர். பிராம்மணஜாதியில் பிறந்தோம் என்று சொல்லிக்கொண்டு ஜாதி மாத்திரம் பிராம்மணர்களாகச் சொல்கின்றவர்களும் தாங்கள்நிர்ப்பந்தம் நேர்ந்த காலத்திலாவது பெரியோருக்கு அபிவாதனஞ் செய்யும்போது அந்த வாக்கியத்தில் கூறப்படும் முன்னோர்களின் பெயரை சற்று கவனித்தார்களானால், இக்கலிகாலகோலாஹலம் தளர்ந்துவிடும். மேல்நாட்டு நாகரீகத்தைக்கைக்கொண்டவர்களின் எண்ணம் எதுவுமே ஒரு நிலைக்கு வராது. அவர்கள் ஊஹித்துப்பேசத் தலைப்படுவது விந்தையிலும் விந்தையாயிருக்கிறது.

வேதங்கள்தான் ஏன் வீண்வசனங்களாய் இருக்கக்கூடாது? தர்மாதர்மங்களின் நிலையை கடவுள் தான் ஏன் மறந்துவிடக் கூடாது? யமன் என்று ஒருவன் இருக்கிறான் என்பதும் ஏன் பொய்யாக இருக்கக்கூடாது? என்று பலவிதமாய் உல்லேகஞ் செய்துகொண்டு சரீரபுஷ்டியுள்ளகாலத்தில் மனக்களிப்புடன் எங்கும் பேரானந்தங் கொண்டவர்கள்போல் திரிகின்றனர்.

(தொடரும்)

K, V. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.